முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 14—9—56 | வெள்ளிசெந்தமிழ் பதிப்பகம், வேலூர். சேலம் | ஒலி 23

ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?

நீங்கள் கேட்கும் திராவிட நாடோ ஆந்திர, கேரள, கன்னடப் பகுதிகளையும் உள்ளடக்கிய பிரதேசமாகும். ஆனல் "திராவிடஸ்தான் கோரிக்கையாளர்களின் நடவடிக்கைகள் தமிழ் நாட்டின் எல்லையைத் தாண்டி வேறு பிரதேசத்தில் அடி எடுத்து வைக்கவில்லை." இது ஒன்றே உங்கள் கோரிக்கையின் பலவீனத்தைக் காட்டவில்லையா?

திராவிட நாட்டுப் பிரிவினை இயக்கம் ஒரு வளரும் சக்தியாகும். அதன் வளர்ச்சி இன்னும் பரிபூரண நிலையை அடைந்து விடவில்லை.

இந்த நேரத்தில், 'உங்கள் கோரிக்கை தமிழகம் தவிர்த்த இதர பிராந்தியங்களிலே எழவில்லையே' என்பது பிரச்னை முழுவதையும் ஆராய்ந்து பார்க்காதவர்களின் அவசரப் பிதற்றல்— என்றுதான் கூற வேண்டும்.

எங்கள் பிரிவினை கிதம் தமிழகம் தாண்டி அவ்வளவாகக் கேட்கவில்லை—ஒப்புகிருேம்.

ஆனல் இது எங்களது பலவீனத்தின் அறிகுறி அல்ல; நாங்கள் இனிமேல் முயன்று பெறவேண்டிய பலத்தினை உணர்த்துகின்ற அறிகுறியாகும்!

சென்ற கட்டுரையிலே விளக்கமுற குறிப்பிட்டிருக்கிருேம்: திராவிட மக்கள் அத்தனை பேரும் ஒரு தனி தேசிய இனத்தை—திராவிட தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களென்று!

'திராவிடஸ்தான் தேவையில்லை' என்று கூப்பாடு போடுபவர்கள் கேட்கலாம்—"ஏனய்யா, நீங்கள் தானே இப்படிக் கூறுகிறீர்கள். ஆந்திர, கேரள, கன்னடியர்கள் அத்தனை பேரும் உங்கள் பிரிவினைத் திட்டத்தை மட்டுமல்ல தாங்கள் தனி தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கூட ஒப்புக் கொள்ளவில்லையே!"—என்று!

—இதையும் நாங்கள் மறுப்பதற்கில்லை.

தமிழ் நாட்டு மக்கள் உணர்கின்ற அளவுக்குக் கூட திராவிடத்தின் இதர குடி மக்கள் தாங்கள் திராவிடர் என்ற தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள்; இனத்தால் கலையால், கலாச்சாரத்தால் வட நாட்டவர்களுக்கு மாறுபட்டவர்கள்—என்பதை உணரவில்லை. அவர்களில் பலருக்கு நிலைமையை விளக்க முற எடுத்துச் சொன்னல்தான் புரியும்.

—ஆனல் இந்தக்காரணத்தை மட்டும் வைத்துக் கொண்டு எங்கள் கோரிக்கையே பழுதுடையது என்று முடிவு கட்டுவது விவேகமற்ற செயலாகும்.

உதாரணமாக நான்கு பேர் ஒரு பூங்காவிலே கூடுகிருர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதில் ஒருவன் முன் வந்து இந்தப் பூங்காவிலேயே முல்லைக் கொடி பயிராகியிருக்கும் பாத்தியிலிருந்துதான் நறுமணம் வருகிறது என்று கூறுகிருன். அந்த நேரத்தில் இதர மூவரும் அதை மறுக்கின்றனர்; முல்லைக்கு மணமில்லை என்று வாதிடுகின்றனர்.

—எனவே இதை வைத்துக் கொண்டு மூன்றுபேர் முல்லைக்கு மணம் கிடையாது எனக் கூறுகின்றனர்; ஒரே ஒருவன்தான் அதற்கு மணம் உண்டு எனச் சொல்லுகிருன். இதில் 'மெஜாரிட்டி' அபிப்பிராயம் தான் சரியானது—என ஐந்தாமவன் ஒருவன் தீர்ப்புக் கூறினல் எப்படி இருக்கும்?

பொருந்தாத் தீர்ப்பு; புத்தி கெட்ட முடிவு என்றுதான் நையாண்டி செய்வர் பலரும்!

முல்லைக்கு இயற்கை மணமுண்டு — என்பது யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத உண்மை!

அதே போலத்தான் ஆந்திர, கேரள, கன்னடத் தமிழ் மக்கள் அனைவரும் திராவிடத் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், என்றும் நிலைத்திருக்கக் கூடிய 'பச்சை' உண்மை!

அவர்கள் அத்தனை பேரும் தற்போது ஒத்துக் கொள்ளாத ஒரே காரணத்தால் மட்டுமே இந்த உண்மை மறைந்து விடாது.

கதையிலே நால்வரில் மூவர் சேர்ந்து முல்லைக்கு மணமில்லை என்றனர். அதேபோலவே ஆந்திர, கேரள, கன்னடியர்கள் தாங்கள் ஒரு தனிதேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள்—என்பதைத் தற்போது ஒப்ப மறுக்கலாம்!

உடனே இந்தப் பிரச்னையில் ஜனநாயகத்தைப் பின்பற்றி மெஜாரிட்டி முடிவே நல்ல முடிவு—எனக் கூறிவிடக் கூடாது. உண்மையை அவர்கள் மறுக்கின்ற காரணத்தால் அந்த மூவருடைய நுகரும் சக்தியிலே ஏதோ பழுது இருப்பதாகத்தான் பொருள் கொள்ள வேண்டும்.

ஆமாம்; ஏகபாரதம் என்னும் சளி பிடித்து உணர்ச்சியிழந்து கிடக்கிறார்கள் அவர்கள்! அதனல்தான் இன்னும் அவர்களுக்கு உண்மையை உண்மை என்று ஒப்புக் கொள்ளும் துணிவு வரவில்லை.

இந்த நிலை இங்கு மட்டுமல்ல; இன்னும் சில தேசிய இனங்களிடையேயும் நிலவி வருகிறது. உதாரணம்: 'அராபிய' தேசிய இனம்!

இன்று அராபியர் என்று சர்வ சாதாரணமாகக் குறிப்பிடுகிருேமே யார் இந்த அராபியர்?

டி. இ. லாரென்ஸ் என்னும் அறிஞர் பதில் கூறுவதைப் பாருங்கள்:

"இந்த அராபியர் இயக்கத்தில் ஒரு கஷ்டம் என்னவெனில் யார் இந்த அராபியர்கள் என்று கூறுவதுதான்!...ஒரு காலத்தில் அராபியா நாட்டின் குடிமக்களெல்லாம் அராபியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். பிறகோ அராபியா என்கிற நாட்டிற்கும் இந்தப் பதத்திற்கும் சிறிதுகூட தொடர்பில்லாது போய் விட்டது. பிறகோ அராபிய மொழி பேசுவோர் அத்தனை பேரும் அப்படி அழைக்கப்படுகின்றனர்.'

இங்கு திராவிடம் என்ற சொல் ஆதியில் ஒரு மொழிக் குடும்பத்தைக் குறித்து, பிறகு படிப்படியாக வளர்ந்து அந்த மொழி பேசும் மக்கட் தொகையைக் குறிக்கிறதோ; அதே போலவே அராபியர் என்ற சொல்லானது முதலில் அராபிய நாட்டவரைக் குறித்து, பிறகு அராபிய மொழி பேசுவோர் அனைவரையும் சுட்டிக் காட்டத் தொடங்கிவிட்டது.

இந்த அராபியர்கள் ஒரு நாட்டிலோ; அல்லது ஒரு கண்டத்திலோ அல்ல; வெவ்வேறு திசைகளில் இரு வேறு கண்டங்களில் பரந்து கிடக்கிருர்கள்.

ஆசியாவிலே அராபிய தீபகற்பம், மெசோபொட்டோமியா, சிரியா, போன்ற பிரதேசங்களிலும்; வட ஆப்பிரிக்காவிலும் அராபிய மொழி பேசப்படுகிறது.

இப்போது அவர்கள் அத்தனைபேரும் அராபியர்கள் என்ற தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நிலைநாட்ட; ஒரு மாபெரும் கூட்டாட்சி முறையை ஏற்படுத்த; அல்லது குறைந்தபட்சம் காமன்வெல்த் போன்ற ஒரு சகோதர அமைப்பு முறையை உண்டாக்கிக் கொள்ள; இயக்கமொன்றே உருவாகியிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடரி மயிரைப் பிடித்தாட்டி வரும் கர்னல் நாசர் இதன் தலைவர்களுக்குள்ளே முக்கியமானவர் என்பதையும் இங்கு நினைவு படுத்திக் கொள்ளலாம்.

ஆனல் இந்தத் திட்டத்தை எல்லா அராபியர்களும் ஒப்புக் கொண்டு விட்டார்களென்று நினைக்கிறீர்களா?

இல்லை.

மத்திய கிழக்கிலே உள்ள சில அராபிய நாடுகளோ இந்த இணைப்பு முயற்சிக்குச் சிறிது கூட ஆதரவு தரவே இல்லை.

அவர்கள் ஆதரவு தராத காரணத்தால் சம்பந்தப்பட்ட அந்த நாட்டவர்கள் அராபிய தேசிய இனத்திலிருந்தும் மாறுபட்டவர்கள் என்று நினைக்க முடியுமா? அராபியர் அனைவரும் ஒரு தேசிய இனம் என்ற கோரிக்கையே பலவீனமுடையது என்று கருதிவிட முடியுமா?

முடியாது. அராபிய இயக்கத்தின் தலைவர்கள் அப்படிக் கருதவும் இல்லை.

காலப் போக்கில் இந்தக் குறை நிவர்த்தி செய்யப்பட்டு விடுமென்றுதான் நினைத்து, பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இதிலிருந்து 'திராவிடஸ்தான்' வேண்டாமென்று கூப்பாடு போடுபவர்கள் ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

முதலில் அராபிய நாட்டுக் குடி மக்கள் தான் அராபியர்கள் என்று கருதப்பட்டனர்.

பிறகோ அராபிய மொழி பேசுவோர் அனைவரும் அராபியர்கள்; ஒரே தேசிய இனத்தைச் சார்ந்தவர்கள்—எனக் கருதப்பட்டனர்.

முன்பே டி. இ. லாரென்ஸ் என்பவரின் மேற்கோள் காட்டியபடி அராபிய தேசிய இனக் கொள்கை வளர்ந்து கொண்டே இருக்கிறது. இதன்

❋ தொடர்ச்சி 8-ம் பக்கம்

சென்னை 14-9-56 வெள்ளி

செப்டம்பர்-17!

—★ × ★—

பெரியார் பிறந்த அன்று பிறந்தோம்—பெரியாரினும் கொள்கையில் இவர்கள் பெரியாரே என மாற்றாரும் கூறுகிற அளவுக்கு வளர்ந்திருக்கிறோம்!

கண்ணீரை உடன் பிறப்பாகக்கொண்டு பிறந்தோம்; குடம் குடமாய்ச் செந்நீரைச் சிந்துகிற அளவுக்கு வலிமை பெற்றிருக்கிறோம்!

ஆமாம்; திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டிலே தோன்றி ஏழாண்டுகளை முடித்துக்கொண்டு எட்டாவது வயதினை எட்டிப் பிடித்திருக்கிறது. அதற்குள், மாற்றுக் கட்சியினர் கொட்டாவி விட்டுத் திகைத்து நிற்கும் அளவுக்கு சென்ற விடமெல்லாம் வெற்றி முரசைக் கொட்டியிருக்கிறது!

இலட்சியப் பாதையிலே இடறிவிடும் பாறைகள்; பாதங்களைப் பதம் பார்க்கும் பருக்கைகள்; ஊளையிட்டுக் காட்டும் ஓநாய்கள்; ஒதிய மிலாறுகள்; உதவாக்கரைகள் — இவையெல்லாம் நமக்குப் பகலவன் முன்னே பல்லிளிக்கும் பனிக்கற்றைகள்! பகல் வேஷம் போடும் 'பவிஷு' கெட்டதுகள்!

இடையிலே இருள்; அதை ஊடுருவும் விதத்திலே துவேஷப் புயல்! இருந்தும் நாம் இலட்சியச் சுடரை சற்றும் ஆடாமல், அசையாமல், அணையாமல், பளிங்கு விழியினும் மேலதாய் பாதுகாத்து எடுத்து வந்திருக்கிறோம்!

பல்லிளிக்கும் பகைமை—நமக்கு ஒரு அணு! பக்கவாட்டில் பதுங்கியிருந்து தாக்கும் நோக்கமிலார் நமக்கு ஒரு தூசு!—என முழங்கி விடுதலைப் போருக்கு எக்காளம் ஊதி விட்டோர், வரலாற்று ஏட்டிலே எக்காலமும் வாழ்வர் என்ற பொன் மொழியைத் தாங்கி பிறந்த மண் காக்க நெஞ்சிலே புண் பெறவும் தயாராகி விட்டோம்!

தீயின் கொழுந்துகளோ, தீக் குழம்போ; திரண்டெழுந்த கடலலையின் உரு மாற்றோ; உருவிலாப் பெரும் புயலின் உருவந்தானோ-என்று அயலவர் கூடாரம் அஞ்சி நடுங்கிடும் வகையிலே, 'பிஞ்சிலே பழுத்தோர்; நெஞ்சிலே துரோகம் கொண்டோர்' என வன்னெஞ்சர்களால் பழித்துரைக்கப்பட்ட நாம் வளர்ந்திருக்கிறோம், அசையாத மலைபோல; வான் முட்டுகிற அளவுக்கு!

தளராத ஊக்கம் கொண்டோர்; கருமத்தைக் கருதி விட்டால் கண் அயராதத் தன்மை பெற்றோர்; நிலையாத சுகத்தை எண்ணி விலையே இல்லாத கொள்கையை விற்றிடும் சிற்றினம் சேராதார் என மாற்றாரும் ஒப்புகிற வகையிலே எதிரிக்கூட்டம் தோற்றோடும் படைவரிசை கொண்டோர் நாம்!

ஏழே ஆண்டுகள்—வாழ்வு பாழே யடையினும், சிறையிலே கூழே கிடைப்பினும், வேழமே எமதுள்ளம்! கூளமே குல்லுகப் பட்டர்கள் திட்டம்!—என மார்தட்டிடும் தங்கக் கம்பி நிகர்த்தோர் நம்மிடம் வேறெந்த இயக்கத்திலுமிருப்பதைவிட அதிகமாகவே அணி வகுத்து, பணி குவித்துத் திராவிடத்தின் பிணி போக்கிட, உடல் பொருள் ஆவி தந்து - கடலோ; காவிரி மணலோ; கண் பார்வை நுழையாக் காடோ என வியந்துரைக்கத் தக்க வகையிலே லட்சோப லட்சமாகப் பெருகி நிற்கின்றனர்!

ஏழே ஆண்டுகள் - எறும்புபோல் உழைத்து, இமயம்போல் வளர்ந்து—குறும்பர்களின் குள்ளநரிச் செயல்களை யெல்லாம் குவலயம் அறியும் வண்ணம் வெட்ட வெளிச்சமாக்கியிருக்கின்றனர்!

ஏழே ஆண்டுகள்—போரே செய்து, யாரே எமக்கு நிகர் யாரே?—என முழக்கிடும் வகையிலே உலக விடுதலை இயக்கங்களின் முன்னணியிலே புன்னகை பூக்க நடைபோடுகின்றனர்!

வயதில் இளையார்; வலுவில், அறிவில் பெரியார் — எனப் போற்றப்படும் இவ்வீரர்கள் காட்டிடும் உற்சாகத்திலும், அவர்களுக்கு நாட்டவர் காட்டிடும் பேராதரவிலும்தான் திராவிட முன்னேற்றக் கழகம் வரலாற்றிலேயே முதல் தடவையாக பொதுத் தேர்தலில் கலந்து கொள்வதென முடிவு செய்திருக்கிறது.

அதற்கென ஐந்து லட்சம் ரூபாய்கள் நிதி திரட்டுவது எனவும் சென்ற கிழமை அறிவகத்தில் கூடிய செயற்குழு-சீரிய திட்டமொன்றைத் தீட்டியிருக்கிறது.

செப்டம்பர் 17—நம் சிந்தை கவர்ந்த நாள்; பெரியார் பிறந்த நாள்!

செப்டம்பர் 17-சிந்தாத கண்ணீரை நாம் சிந்திய நாள்; பெரியாரை விட்டுப் பிரிந்து புதுக்கழகம் கண்ட நாள்!

செப்டம்பர் 17—செங்குருதி தந்து நாடு மீட்போம் எனச் சபதம் எடுத்திடும் நாள்; திராவிடநாட்டுப் பிரிவினை நாள்!

மறக்க முடியாத மூன்று இலட்சியங்கள் பின்னிக்கிடக்கும் இந்த நன்னாளிலேதான், தென்னகத்து அரசியலிலே உண்மை ஜனநாயகத்தை நிலை நாட்டிட முன்னிலும் வேகமாக; பலமாக நமது இலட்சியத்தை பல விதங்களிலே முழங்கிக் காட்டவேண்டியவர்களா யிருக்கிறோம்!

வட நாட்டு ஏகாதிபத்தியம்; உள்நாட்டவரிடையே நிலவும் ஏக பாரதப் பித்தம் — இரு பெரும் மலைப்பாம்புகள் நம்மை விழுங்கிடத் துடிக்கின்றன!

திராவிட முன்னேற்றக் கழகம் மெல்லாமலேயே விழுங்குகிற இந்த இரு மலைப்பாம்புகளிடமிருந்துதான், மகோன்னத லட்சியத்தைக் காப்பாற்றிட, தாயகமாம் திராவிடத்தைப் பெற்றிட—ஊன் மறந்து, உயிர் மறந்து போராட வேண்டியிருக்கிறது.

அந்தப் போராடும் பெருங்குணம் பெருகி வளர, பொல்லாத சக்திகள் கூனிக் குறுக, திராவிடப் பெருங்குடி மக்களே! இந்த நன்னாளில் நாமெல்லாம் நம்மைத் தயார் செய்து கொள்ள உறுதி எடுத்துக் கொள்வோம்! வாழ்க திராவிடம்!

★

விரைவில்!...

உணர்ச்சி மிகுந்த சித்திரம்

கருணாநிதி எழுதும்,

காதல்—வீரம் கலந்த தொடர் கதை!

சுருளிமலை

'முரசொலி'யில் ஆரம்பமாகிறது விரைவில்!

நாடகம்

காட்சி: 4

சமயோஜிதம் பிள்ளை வீடு.

[அவருடைய மகள், கண்ணம்மா பாடிக் கொண்டிருக்கிறாள்]

"கற்பு நிலையென்று சொல்ல
வந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில்
வைப்போம்;
வற்புறுத்திப் பெண்ணைக்
கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி
மிதித்திடுவோம்
நல்லவிலைகொண்டு நாயை
விற்பார், அவர்
நாயிடம் யோசனை
கேட்பதுண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையும்
அந்நிலை
கூட்டிவைத்தார் பழி
கூட்டி விட்டார்.
காதலன் ஒருவனைக்
கைப்பிடித்தே, அவன்
காரியம் யாவினும்
கைகொடுத்து,
மாதர் அறங்கள்
பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து
வாழ்வமடி."

[அப்போது, கறுப்பனும் பலவேஷம் பிள்ளையும் உள்ளே நுழைகிறார்கள். கண்ணம்மா அவர்களை வியப்போடு பார்க்கிறாள்]

பலவே: யாரும் இல்லம்மா... இவர்தான் தியாகி கறுப்பன்னு மிகப் பெரிய அசாமி!..., ...இதுதான் கறுப்பா; எங்க முதலாளியோட மகள்!...

[அறிமுகப்படுத்தப்பட்ட இருவரும் ஒருவரை யொருவர் வணங்கிக் கொள்கிறார்கள்.]

கண்ண: உக்காருங்க!

பலவே: முதலாளி எங்கம்மா போயிருக்காரு?

கண் : எனக்குத் தெரியாதே... முன்னயே போனாரு! ஒரு வேளை இப்ப வந்து விடலாம்.

பலவே : கறுப்பா! இரு, நான் போயி முதலாளியை அழைச்சிகிட்டு வர்ரேன். அவரு......பக்கத்திலே போஸ் வாசகசாலையிலே இருந்தாலும் இருப்பாரு! (போகிறார்.)

கண் : [கறுப்பனிடம்] ஏதாவது சாப்பிடுறிங்களா?

கறுப் : என்ன இருக்கு?...... இருந்தா கொடுங்களேன்.

கண் : ஹார்லிக்ஸ் கொண்டு வரட்டுமா?

கறுப் : அய்யய்யே அதெல்லாம் கட்டுபடியாகாது!... இட்லி, தோசை, அதுக்கு மேலே காபி!...

கண் : கொஞ்சம் இருங்க, இதோ கொண்டு வருகிறேன்.

(உள்ளே போகிறாள்.)

[கறுப்பன் வீட்டைச் சுற்று முற்றும் பார்க்கிறான். ஒரு பெரிய காந்தி படம் மாட்டியிருக்கிறது. அந்தப் படத்தையே உற்றுப் பார்க்கிறான். அவனையறியாமல் பாடுகிறான் உரக்க......]

"வாழ்க நீ எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந்தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!"

[பாடிக்கொண்டே படத்தின் அருகாமையிலே போகிறான். மாட்டப்பட்டுள்ள படத்தின் பின்னே ஏதோ இருப்பதாக அறிந்து, படத்தைநகர்த்தி விட்டுப் பார்க்கிறான். ஒரு மதுப்புட்டி இருக்கிறது. அதைக் கையிலே எடுத்துக் கொண்டு, தனக்குத்தானே ஏளனமாகச் சிரிக்கிறான்.

"நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி!—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி!
கூட்டத்தில் கூடி நின்று
கூவிப்பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி!
கிளியே—
நாளில் மறப்பாரடி!"

எனப் பாடிக்கொண்டே, மறைவாகச் சென்று புட்டியைக் காலி செய்துவிட்டு, பழைய இடத்திலேயே கொண்டுவந்து வைத்துவிடுகிறான். கண்ணம்மா பலகாரங்களை எடுத்துக்கொண்டு வருகிறாள். கறுப்பனுக்கு போதை சிறிதுசிறிதாக ஆரம்பமாகிறது. கண்ணம்மா அவனுடைய நிலையைப் புரிந்து கொள்ளவில்லை. தட்டை அவனெதிரில் வைக்கிறாள். அவன், பரபரப்போடு சாப்பிடத் துவங்குகிறான். அதைக் கண்டு கண்ணம்மா புன்னகை புரிகிறாள்.]

கண்: ரொப்ப பசி போல இருக்கு?.....ஏன்; காலையிலே சாப்பிடலியா?...

கறுப்: நேத்தி ராத்திரி சாப்பிட்டாவுல்ல; நான் காலையிலே சாப்பிடுவதற்கு?

கண்: ஏன்—ஏதாவது உண்ணாவிரதமா?

கறுப்: ஆமாம்........உண்ணாவிரதம்தான்! எங்களைப் போன்ற உழைப்பாளிகள்—உருக்குலைந்த ஏழைகள்—இப்படி உண்ணாவிரதம் இருக்கத்தானே மகாத்மா காந்தி உண்ணாவிரதம் இருந்து கஷ்டப்பட்டார்! எங்களுடைய உண்ணாவிரதம் விளம்பரம் பெறுவதற்கோ—பலநாள் போட்டுப் போட்டு அடைத்து வேலை செய்ய முடியாமல் திணறித் தவிக்கும் இரைப்பை சிறு குடல்களுக்கு ஓய்வளிப்பதற்கோ அனுஷ்டிக்கப்படுவது அல்ல! என்னைப் போன்றவர்கள் சாப்பிடுவதே; ஜீரணக் கருவிகள் துருப்பிடித்து விடாமல் இருப்பதற்காகத்தான்! நாங்கள் எல்லாம் வாழ்வதற்காகவே சாப்பிட முயலுகிறோம். சிலர் இருக்கிறார்கள்; நாட்டில்—சாப்பிடுவதற்காகவே வாழ்கிறவர்கள்!

[என்றபடி பலகாரத் தட்டைக் காலி செய்கிறான். அவசரத்தில் பலகாரம் தொண்டைக் குழியில் விக்கி, மூக்கெல்லாம் வந்து விடுகிறது. கண்ணம்மா அவன் தலையைத் தட்டிக் கொடுக்கிறாள்.]

கறுப்: நீ மிக மிக நல்லவளாய் இருக்கிறாய்! உன் பெயர் என்ன?

கண்: என் பெயர் கண்ணம்மா!

கறு; கண்ணம்மா! அழகான பெயர்! கண்ணம்மா!

"சுட்டும் விழிச்சுடர்தான்
கண்ணம்மா!
சூரிய சந்திரரோ!
வட்ட கரியவிழி கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ!
பட்டுக் கருநீலப் புடவை
பதித்த நல் வயிரம்
நட்ட நடுநிசியில் தெரியும்
நட்சத்திரங்களடி!"

[என அகமகிழ்ந்து, மெய்மறந்து பாட ஆரம்பிக்கிறான். கண்ணம்மா அவன் பாடலை ரசிக்கிறாள்,]

கண் : இனிமையாகப் பாடுகிறீர்களே!

கறுப் : கண்ணம்மா!... கவிச் சக்கரவர்த்தி பாரதியார் உன்னைப் பார்த்துத்தான் கவிதை வரைந்தாரோ என்று சந்தேகப்படுகிறேன் நான்,

கண் : நீங்கள் பேசுவது உங்களுக்கே நாகரிகமாகத் தெரிகிறதா?

கறுப் : குற்றமானால் மன்னித்து விடு! ஆனால்ஒன்று! கண்ணைக் கவருகிறஎதைப் பார்த்தும் மனிதன் பாராட்டுவதில் தவறு எதுவுமில்லை. வானத்து நிலவைப் பார்த்து கோடானு கோடி கவிஞர்கள் வர்ணித்திருக்கிறார்களே; அதற்காக அது ஒரு நாளாவது கோபித்துக்கொண்டதுண்டா?

கண்: கோபித்துக் கொள்ளாமலா; முகத்தை மூடிக் கொண்டு நெற்றியை மட்டும் பிறை என்று காட்டுகிறது?

கறுப்: சபாஷ்! நீகூட அழகாகப் பேசுகிறாயே; அப்படியானால் நீ ஒரு அறிவாளிக்கு மனைவியாகத் தகுதியுள்ளவள்தான்.

கண் : அந்த அறிவாளியைத்தான் எங்கப்பா எனக்காகத் தேர்ந்தெடுத்துவிட்டாரே!

கறுப் : அப்படியா? யார் அந்த அறிவாளி?

கண் : கள்ளுக் கடைகளை ஒழிப்பதற்கு சட்டம் கொண்டு வருவதை விட நாட்டிலே யுள்ள தென்னைமரம்பனை மரங்களை யெல்லாம் அடியோடு வெட்டி வீழ்த்தி விட்டால் மதுவிலக்கு வெற்றி பெற்று விடும் என்று யோசனை சொன்னாரே; அந்த அதிமேதாவிதான்!

கறுப்: யார்? ஆனை மூஞ்சிப் பிள்ளையா? ஆகா! அவர் லட்சாதிபதி யாச்சே!...

கண்: அதனாலதான் அவர் சம்மந்தத்தைத் தேடுகிறார் அப்பா! அவரை நீங்கள் நேரில் பார்த்திருக்கிறீர்களா?

கறுப் : பார்த்திருக்கிறேன், காணச் சகிக்காத காட்சி! காட்டு விலங்கு போல இருப்பார்!......பணமிருக்கிறது ஏராளமாக!

கண் : அவரைத்தான் நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமாம்.

கறுப் : என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள் உனக்கு உரியதாகுக! கண்ணம்மா! உங்க அப்பாவோட புத்தி ஏன் இப்படிப் போனது?

கண் : அப்பா எலக்ஷனுக்கு நிக்கப் போகிறார். அதற்குப் பணம் வேண்டும் ஒரு நாற்பதினாயிரமாவது!

கறுப் : அதற்காக......

கண் : ஆனை மூஞ்சிப் பிள்ளைக்கு என்னைத் திருமணம் செய்து கொடுத்தால் அப்பாவுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் கிடைக்கும்.

கறுப் : (எழுந்து) அக்கிரமம்! இந்த அழகுப் பதுமையை

❊ தொடர்ச்சி 9-ம் பக்கம்

பொழுதுபோக்கு

'டெமாஸ்தனிஸ்'

"தமிழினம் வாழ்ந்த இனம். வந்தவர்களை வாழவைத்த இனம். இன்று வந்தவர்களால் ஆளப்படுகிற இனம்.

"ஒருநாள் தமிழன் உலகமெல்லாம் சென்றான். பல நாடுகளை வென்றான். பல நாடுகளைப் பண்படுத்தினான். பல நாட்டு மக்களுக்குப் பண்பாடு பயிற்றுவித்தான். இன்று அந்த நாட்டினரால் வெறுக்கப்படுகிறான், விரட்டப்படுகிறான், நாதியற்ற பிணமாக நடுத்தெருவிலே சுட்டெறியப்படுகிறான்.

"உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் தமிழனுக்குத் தாழ்நிலை. தமிழுக்குத் தாழ்நிலை. இந்நிலை மாற வேண்டுமானால், தமிழனுக்கு முதலில் மொழிப் பற்று வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள பள்ளிகளில் கல்லூரிகளில், கடைகளில், அலுவலகங்களில், புகை வண்டி நிலையங்களில், அஞ்சல் அட்டைகளில், கோவில்களில், இவை போன்ற எல்லா இடங்களிலும் தமிழ், ஆட்சி நடத்த வேண்டும். அப்பொழுதுதான் தமிழன் தன்னை அறிவான். தன்னுடைய பண்டைய நிலையை அறிவான். அந்நிலையை மீண்டும் அடைவான்!"

மேற் குறித்த மணி வாசகங்களை உதிர்த்திருப்பவர் வேறு யாருமல்ல தோழர்களே; சாட்சாத் குன்றக்குடி அடிகளாரே தான். மீண்டும் சற்று சிந்தித்துக் கவனியுங்கள்.

"இன்று, வந்தவர்களால் ஆளப்படுகிற இனம்!"

தமிழினம் அரசியல் உரிமை பெறாத, வந்தவர்களால்—வடவர்களால் — சுரண்டப்படுகிற இனம் என்று நாம் கூறிய போது, நம்மை மிரட்டியவர்களும், உருட்டி விழித்தவர்களும், சல்லடம் கட்டிப் புறப்பட்ட சனாதனிகளும், அடிகளாரின் இந்த ஆணித்தரமான தீர்ப்புக்கு என்ன பதில் கூறப்போகிறார்கள்?

"நாதியற்ற பிணமாக நடுத் தெருவிலே சுட்டெறியப்படுகிறான்"

சிங்களத் தீவிலே, செந்நீர் பாய்ச்சி தேயிலைத் தோட்டங்களிலே பொன் விளைத்த அந்த மூவேந்தர் பரம்பரையை, நாயைச் சுடுவது போல் சுட்டு வீழ்த்தியதே சிங்களத் துரைத்தனம், அதைத்தான் ஆவேசத்தோடு சுட்டிக்காட்டியிருக்கிறார் அடிகளார். தன் மக்கள் படுகின்ற அல்லலைப் பார்த்தும், மௌனமே அரசியல் மேதாவிலாசம் என்று எண்ணிக் கொண்டிருப்போரை இடித்துரைக்கும் வகையில்தான், 'நாதியற்ற பிணங்களாக' என்று உள்ளத்தில் குமுறியெழும் உணர்ச்சியைக் கொட்டியிருக்கிறார்.

போஸ்டர்கள் மூலமாக, 'சிலோன் அரசாங்கத்தின் சில மற்ற போக்கினை நாம்-சித்தரித்துக் காட்டியபோது, நம்முடைய அரசியல் விளக்க அறிவிப்புகளை 'சினிமா விளம்பரங்கள்' என்று கேலி பேசிய 'கனம்'கள், நன்றாக உணர வேண்டும். ஆத்மீகத் துறைக்கு மட்டுமே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் கூட, ஆத்திரமடையும் அளவுக்கு இந்த பஞ்சசீல பச்சைத் தமிழரின் அரசாங்கத்தின் போக்கு இருக்கிறது என்ற உண்மையை!

அடிகளார் அரசாங்கத்திற்கும் தமிழினத்திற்கும் அறைகூவலே விடுத்திருக்கிறார். புகைவண்டி நிலையங்களிலும், அஞ்சல் அட்டைகளிலும், இந்தி மறைந்து இன்பத் தமிழ் இடம் பெறாவிட்டால் தமிழன் தன் நிலையை - கடல்தாண்டி நாகரிகம் வளர்த்த அந்தப் பெற்றியை—மீண்டும் பெற முடியாது என்று எச்சரித்திருக்கிறார்.

ஆம், தோழர்களே, நம் பணி வீண் போகவில்லை, பலனளித்திருக்கிறது! காவியுடையிலிருந்து, 'கனம்'கள் வரை நம் கருத்து சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு, குன்றக்குடி அடிகளார் திருச்சியில் தமிழ்ச் சங்கத்தை ஆரம்பித்துப் பேசியிருக்கும் மேற்குறித்த பேச்சே போதுமான சான்றல்லவா?

* * *

காவியுடைக்காரரின்கதைஒரு புறமிருக்க, கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் அதே விழாவில் பேசியிருக்கிறார்.

"உலகிலுள்ள மொழிகளில் பழமையிலும் பழமை வாய்ந்த தமிழ், வட மொழி வருகையால் மெள்ள மெள்ளச் சிதைந்து வருகிறது, தமிழ் சமுதாயம் சாதி சமயங்களாகச் சிதைந்து வருகிறது. ஒரு மொழியின் ஊடுருவலையே இந்நிலை என்றால், இன்னொரு மொழியும் வந்தால் எந்நிலை ஏற்படும்? ஆகவேதான் புகுந்த வட மொழியை விரட்டும் பணியுடன் இந்தி புகுந்து விடாதபடி தடுக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்."

பேசியிருப்பவர் மதுரைத் தியாகராயர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் இராசமாணிக்கனார் அவர்கள். இதைவிட வேறென்ன தெளிவுரை வேண்டும்? கடமையை உணர்த்தும் கருத்துரைகள் அல்லவா இவைகள்? அவர் மேலும் பேசுகிறார் :

"இந்தக் காலம் கெட்டு விட்டது என்று சிலர் சொல்லுகிறார்கள், உண்மையில் இந்தக் காலம்தான் —அடிமைப் பட்ட தமிழகத்தின் எழுச்சிக் காலமாக புரட்சிக் காலமாக, பொற்காலமாக இருக்கிறது. இதைக் கண்டு அஞ்சுகிறவர்கள்தான், இந்தக் காலம் கெட்டு விட்டது என்கிறார்கள்."

இதைவிட வேறெப்படி கல்லூரியில் இருக்கின்ற பேராசிரியர் ஒருவர் அண்ணாவிற்கும் அவர்தம் தம்பிமார்களுக்கும் புகழுரை சூட்ட முடியும்? ஏதோ, அவர் கூறியதை நமக்குச் சாதகமாகத் திரிக்கிறேன் என்று யாரும் எண்ணத்தேவையில்லை! அவர் பேச்சின் பிற்பகுதியில் அவரே அதைத்தெளிவாகக் குறிப்பிடுகிறார். "தனித் தமிழில் பேசுகிறவர்களை எழுதுகிறவர்களை புதுமைக் கருத்துக்களைப் போதிப்பவர்களை,புரட்சி எண்ணங்களை எழுப்புகிறவர்களை—நாத்திகர்கள் என்று சொல்லுவது ஒரு வழக்கமாகி விட்டது. அதில் தவறுமில்லை. உண்மையில் அவர்களிடம்தான் இன்று தமிழ் இருக்கிறது."

தமிழுக்குச் சொந்தக்காரர்களிடம் தமிழ் இருக்கிறது, என்று உறுதியோடு நம்புகிறார் டாக்டர் இராசமாணிக்கனார்.

அடிகளார், தமிழுக்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தைச் சுட்டிக் காட்டி நம்மை அறை கூவி அழைக்கிறார்.

ஏற்பட்டிருக்கும் அபாயத்தை எதிர்த்துப் பொசுக்கும் ஆற்றல் நம்மிடம்தான் இருக்கிறது என்கிறார், டாக்டர் இராசமாணிக்கனார்.

இன்றைய ஆட்சி தமிழனுக்குத் துரோகம் இழைத்துவிட்டது என்பதை நாம் மட்டுமல்ல, அடிகளார், இராசமாணிக்கனார் மட்டுமல்ல, நல்லறிவாளர் அனைவருமே ஒப்புக் கொள்வர். நாம் எழுப்ப வேண்டிய கேள்வி யெல்லாம், தமிழனுக்குத் துரோகம் புரியும் ஆட்சி தமிழ் நாட்டிலே நீடிக்க விடலாமா என்பது தான்!

* * *

ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்போருக்கு மக்கள் உரிமையைக் காப்பாற்ற வழியில்லை; அவர்களுடைய ஒழுக்கத்தைக் காப்பாற்றும் பணியில் தீவிரமாக முனைந்திருக்கிறார்கள்.

சினிமா விளம்பரப் 'போஸ்டர்'களில் ஆபாசமான (?) படங்கள் வெளியிடுவதைத் தடுக்கவும், விளம்பர போஸ்டர்கள் ஒட்டி சுவர்களை அவலட்சணப் படுத்துவதைத் தடுக்கவும், மசோதா கொண்டுவரப் போவதாக கனம் பக்தவத்சலம் மேல் சபையில் அறிவித்துள்ளார்.

இரண்டாவது நோக்கம் சரியது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். ஆனால் ஆபாசமான படங்களைத் தடுப்பது எப்படி? 'ஆபாசம்' எது என்பதை எப்படி வரையறுப்பது? அதற்கென்று ஏதாவது இலக்கணம் இருக்கிறதா?

மார்புத்துணி விலகியிருப்பது போல் படங்களைப் போட்டுக் காட்டி வாலிபர்களை வசீகரிப்பது 'ஆபாசம்' என்று வைத்துக் கொள்வோம். அப்படிப் போஸ்டர் வெளியிடுவதே ஆபாசம், அது வாலிப உள்ளங்களைப் பாழ் படுத்துகிறது என்றால், போஸ்டரில் போடப்படும் தோற்றங்களிலேயே—ஏன், அதைவிட ஆபாசமான உடையலங்காரங்களுடன் — நம்முடைய நகர்களை வலம் வருகிறார்களே நாரீமணிகள், அவர்களை அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? அதற்கு, வரவிருக்கின்ற மசோதாவில் ஏதாவது இடம் இருக்குமா? போஸ்டரில் காட்சிதரும் 'ஆபாச'த்தைவிட உயிரோடு உருப்பெற்று உலவும் 'ஆபாசம்' அதிபயங்கரமல்லவா? அப்பொழுது ஆண் பெண் உடையை ஒழுங்குபடுத்தும் மசோதா ஒன்றும் தேவைப்படும்...அந்த மசோதா அரசியல் சட்டம் அளித்திருக்கும் அடிப்படை உரிமைகளுக்கு முரண்பட்டதாக இருக்கும்...பிறகு...!!??

உள்ளத்தின் ஆழத்திலிருந்து உருப்பெற்று எழுவது ஒழுக்கம். ஒழுக்கத்தின் விழுப்பத்தைத் திடீரென்று உணர்ந்து விட்டவர்கள் போல் சட்டங்கள் செய்வதில் பலனில்லை. இந்த உண்மையைத்தான் மேல் சபை மெம்பரான சர்க்கரைச் செட்டியாரும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அப்படியானால் ஹாலிவுட்டிலிருந்து வரும் படங்கள், அதற்கான விளம்பரங்கள் தடை செய்யப்படுமா? கையில்லாமல் மேலங்கியணியும் விஜயலட்சுமியாரின் படம் பத்திரிகையில் இனி வெளிவராதா? பிரபல ஹாலிவுட் நகைச் சுவை நடிகர் டானிகே-விஜயலட்சுமியாரின் திருக்குமாரிகளின் இடுப்பை வளைத்து அணைத்துக் கொண்டிருக்கும் படம் சில புத்தகங்களில் வெளியிடப் பட்டிருக்கின்றனவே, அவைகளை வெட்டி விடுவார்களா? இது போன்ற எத்தனையோ கேள்விகள் என்னைக் கேட்பீர்கள். எனக்கென்ன பதில் தெரியும்? பக்தவத்சலனாரைக் கேட்டுப் பாருங்கள். ஒழுக்கத்தை நிலைநாட்ட மசோதா கொண்டு வரப்போகும் அவருக்கு இந்த உண்மைகள் தெரியாமலா இருக்கும்!

*

சென்ற இதழில்....

தாயின் தற்கொலை கண்ட சிந்தாமணி, தன் குடும்பத்தின் சிரழிவுக்கே ஆனந்தியும் டைகருந்தான் காரணம் எனக் குமுறி எழுந்து, ஆனந்தியைப் பழி தீர்த்துக் கொள்ளப் புறப்படுகிருள். அப்போது ஆனந்தி மருத்துவ விடுதியில், நயிஞ் ஆனந்தியை சோதிப்பதற்காக அழகப்பன் படுத்திருக்கும் அறையில் போய்ப் படுத்துக் கொள்கிருன். ஆனந்தி, நயிஞ எதிர்பார்த்தபடி வராமல், நயிஞ அறையென எண்ணி அழகப்பன் கட்டிலண்டை போகிருள். அப்போதும் அழகப்பன் அவளிடம் தன் எண்ணத்தை வலியுறுத்துகிருன். இதை வெளியே இருந்து நயிஞ முகம்மது கவனிக்கிருன். இவர்கள் யாருக்கும் தெரியாமல் அங்கே ஒரு மூலையில் சிந்தாமணியும் ஒளிந்திருக்கிருள் : வேறிடத்தில்! அப்போது......

20

அழகப்பனின் பிடியிலிருந்து விடுபட முடியாமல் சங்கடப்பட்ட ஆனந்தி அவனை மிகவும் இரக்கத்தோடு பார்த்து, 'என்னைக் காப்பாற்றுங்கள்' என்று ஈன சுரத்தில் கேட்டாள். அந்த வார்த்தையின் பொருளைத் தவருகப் புரிந்துகொண்ட அழகு, "மலை மலையாகக் குவிந்து கிடக்கிறது திரவியம். அலை அலையாக எழுகிறது அன்பு. காப்பாற்ருமல் இருப்பதற்கா கண்ணே; உன்னை என் கண் வழியே அழைத்து வந்து உள்ளத்தில் குடியேற்ற விரும்புகிறேன்." என்ருன் தழுதழுத்த குரலில்!

"என்னை உங்கள் தங்கை போலப் பாவிக்க வேண்டும்."

"நீயாக அப்படியொரு கற்பனை செய்து கொண்டு என்னைக் கல்லிலும் முள்ளிலும் தள்ளாதே! கனி பறிக்கக் கால் கடுக்க ஓடிவந்தவன் நான். காய்தான் நான் என்று சாய்ந்து விழாதே! மலர் தேடி மயங்கிய மனம் — முள்ளென்று கூறி முடங்கிவிடச் செய்யாதே!"

"என்னை நீங்கள் மறந்துவிடத்தான் வேண்டும்."

"நீ டாக்டர் — நான் நோயாளி!

"நான் டாக்டர்தான் — உங்கள் நோய்க்கு மருந்து சொல்ல முடியுமே தவிர டாக்டரே மருந்தாக மாறிவிட முடியுமா?"

"மருந்து சொல்ல முடியாது உன்ருல்!"

"ஏன் முடியாது? சிந்தாமணியிருக்கிருள்; உங்கள் சிந்தைப் பிணி அகற்ற வல்ல சிறந்த மருந்தாக!"

"சாகிறவன் சஞ்சீவி கேட்டால், விஷத்தை சிபாரிசு பண்ணுகிருய் நீ!"

"இல்லை. சிந்தாமணி விஷமல்ல! அவளை விஷமாக மாற்றிவிட்டோம் நானும் டைகரும் சேர்ந்து! நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கள். டைகரின் சூழ்ச்சிக்கு அடிபணிந்த காரணத்தால்தான் அபாக்யவதி சிந்தாமணியை அழுக்கேறிய சிந்தாமணியென்று உங்களை நம்பவைத்தோம். உண்மையிலேயே அவள் மாசற்றவள். இன்னொருத்தியின் குழந்தையை அவள் பக்கத்திலே படுக்கவைத்து பிரசவமாகிவிட்டது என்று ஏமாற்றினேம். பிறகு எனக்கே மனச்சாட்சி கேட்கவில்லை. ஓடிவந்தேன். உங்கள் காரிலேயே சிக்கினேன். இப்போது உங்கள் கரத்திலும் சிக்கியிருக்கிறேன். என்னை விட்டு விடுங்கள்!"

"எல்லாம் பொய், நீ தப்பித்துக்கொள்வதற்காக சிந்தாமணியை நல்லவள் என்று கதை கட்டுகிருய்! ஆனந்தி — என் நிலைமை கண்டு உனக்கு இரக்கமே பிறக்கவில்லையா? என்னை உனக்கு ஏன் பிடிக்கவில்லை? அவசரப்பட்டு உன்னிடம் தவருக நடந்து கொண்டதாகக் கருதி என்மீது நம்பிக்கை குறைந்து விட்டதா உனக்கு? தயவு செய்! தீக் காட்டால் அழிந்துவிட்ட என் இதயச் சோலையில் பூக்காடாய் மணக்க வருவாய்—புது நிலவாய் ஒளி சிந்தி வருவாய்—பொன் வண்டாய்ப் பறக்க வருவாய்—பொதிகைத் தென்றலாய்—பூங்குயில் இசையாய் உலவுவாய் என்றெல்லாம் கனவு கண்டேன். அவ்வளவும் கரைந்துவிட்ட நினைவுகள்தானு? சொல் ஆனந்தி! சொல்!!"

"என்னிடம் நீங்கள் கேட்கும் பொருள்; கேட்டவுடன் தந்து விடுவது அல்லவே...இருதயத்தை யல்லவா கேட்கிறீர்கள்."

"ஏன் தர இயலாதா?"

"அதுமுன்பே பண்டமாற்று ஆகிவிட்டது!"

"அப்படியானல்?"

"ஆமாம்! உங்கள் தோழர் என் இருதயத்தை எடுத்துக் கொண்டு அவர் இருதயத்தை என்னிடம் கொடுத்து விட்டார்!"

"ஆ! நயிஞ முகம்மது எனக்குத் துரோகம் செய்து விட்டானு?" என்று பெருமூச்சோடு கேள்வி கேட்டவாறு அவளைப் பிடித்திருந்த கைகளை விட்டு விட்டுத் திரும்பினுன் அழகு.

"துரோகம் செய்யவில்லை அழகு! உன் நண்பன் எப்போதுமே துரோகம் செய்து பழக்கப்பட்டவனல்ல." இந்த வார்த்தைகளோடு நயிஞ உள்ளே வந்தான். அழகப்பனுல் ஆத்திரத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஓங்கி 'பளார்' என்று நயிஞ முகம்மதின் கன்னததில் ஒரு அடி கொடுத்தான். நயிஞவின் கன்னம் அப்படியே கன்னிப்போய் விட்டது. வாயிலே இதழோரத்தில் இலேசாக ரத்தம் வழிய ஆரம்பித்தது. நயிஞ அடியை வாங்கிக்கொண்டு அமைதியாகவே நின்ருன். அழகு, வெறி பிடித்தவன் போல ஆகிவிட்டான்.

நயினமீது மீண்டும் புலி போலப் பாய்ந்து தாக்கிடத் துவங்கினுன். நயிஞ, அழகு தரும் அடி உதைகளைப் பொறுத்துக் கொண்டான். கன்னத்தில் மறுபடியும் ஒரு குத்து!...வயிற்றிலே சரியான அடி. தலையிலும் காயம். நயிஞ எதிர்த்தே அடிக்கவில்லை அப்படியே சோர்வுற்றுக் கீழே விழுந்தான். அழகு அவனை வெறி உணர்ச்சியோடு பார்த்துக் கொண்டு நின்ருன், கீழே சாய்ந்த நயிஞ மெதுவாக எழுந்தான். அவன் தலையிலும் வாயிலும் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஒரு அலட்சிய சிரிப்புடன் நயிஞ முகம்மது அந்த அறையை விட்டு வெளியேறினுன். ஆனந்தி மயக்க முற்றுக் கட்டிலில் சாய்ந்தாள். அழகு அசைவற்று நின்று கொண்டேயிருந்தான். அவன் வெறி தீர்ந்தபாடில்லை. கைகால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. தான் செய்தது சரியா—தவரு என்று யோசிப்பதற்குக் கூட முடியாமல் அவனது நினைவு துயிலில் ஆழ்ந்து விட்டது, சிறிது நேரத்திற்குப் பிறகு அவனும் அந்த அறையை விட்டு வெளியேறித் தன் அறைக்குப் போய் விட்டான்.

இந்த நிகழ்ச்சிகளின் குழப்பமான ஒலி மட்டுமே அங்கு ஒளிந்திருந்த சிந்தாமணியின் காதில் விழுந்ததே தவிர, யார் யார் பேசிக் கொண்டார்கள் என்பதோ, என்ன நடந்தது என்பதோ தெரியாது. அறைக்குள்ளே ஒரு பெண் இருக்

கிருள்: அவள்தான் ஆனந்தி என்பதை மட்டும் அவள் புரிந்து கொண்டிருந்தாள்: முதலிலேயே அவளைத் தொடர்ந்து வந்த காரணத்தால்! குழப்பங்கள் முடிந்து கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஒரே அமைதி நிலவிற்று. சிந்தாமணி, தான் ஒளிந்திருந்த இடத்தை சுற்று முற்றும் பார்த்தாள். ஒரு அம்மியும் அம்மிக் கல்லும் இருந்ததைக் கண்டாள். அவள் கண்களிலே தீப்பொறி கிளம்பியது.

தந்தையின் சாவு — தாயின் பிணம்—தனக்கு விபச்சாரிப் பட்டம் — குற்றவாளிக்கூண்டு —சிறைச்சாலை — இத்தனையும் ஒன்றன்பின் ஒன்ருக அவள் மனத்திரையிலே படம் போல் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. "பழிக்குப் பழி!" உலர்ந்துபோன உதடுகள் ஆக்ரோஷத்தோடு இந்தச் சொற்களை உச்சரித்து சூடேறின. அம்மிக் குழவியை இரு கைகளாலும் தூக்கிக் கொண்டாள். தலைக்குமேலே குழவியைப் பிடித்துக்கொண்டு பயங்கரமாக —ஆனந்தியிருக்கும் அறையை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

அம்மிக் குழவியை ஆனந்தியின் தலையில் போட்டு அவளைக் கொன்று விடுவது என்ற முடிவு! அயலார் குழவியைத் தன்னருகே படுக்க வைத்துத் தன்னை வேசியாக்கியவளின் தலையிலே—இந்தக் கருங்கல் குழவியைப் போடுகிறேன் என்று மனதுக்குள் 'சபதம்' செய்து கொண்டாள் போலும்.

ஆனந்தியோ, தன் காதலனின் நிலைமை கண்டு மூர்ச்சித்து விழுந்திருக்கிறாள்; படுக்கையிலே! மரணத்தை எதிர்பார்க்கும் அச்சம் ஒரு சிறிதுமில்லாமல் அவளைச் சாவு உலகிற்கு அனுப்பிவிட சிந்தாமணி வந்துவிட்டாள். கொலை செய்யப் போகிறோம் என்ற பயம் சிறிதும் தலைகாட்டவில்லை சிந்தாமணிக்கு! எல்லாவற்றுக்கும் துணிந்துவிட்ட ஒரு அசட்டுத் தைரியம் அவள் முகத்திலே பிரகாசித்துக் கொண்டிருந்தது. மங்கலான வெளிச்சத்திலே அவளது முகம் மிகப் பயங்கரமாகத் தோற்றமளித்தது. குறி பார்த்துக் குழவிக் கல்லை அவள் தலைமீது போடுவதற்குத் தயாராகி விட்டாள் அந்த இளஞ்சிட்டு! அவளைத் தடுப்பதற்கு அங்கு யாருமே இல்லை. மனச்சாட்சியொன்றுதான் குறுக்கிட்டிருக்க வேண்டும். மாருக அது தான் அவளைக் கொலைச் செயலுக்குத் தூண்டி விட்டுத் தூபம் போட்டது. அழகப்பனோ, தன் அறையில் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தான். இன்னும் அவன் நினைவுகள் புரண்டு படுக்கக்கூட இயலாமல் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தன, நயினா முகம்மது, தள்ளாடியபடியே மாடியைக் கடந்து கீழே வந்து, முகத்தையும் காயம்பட்ட இடங்களையும் கழுவிக் கொண்டான். அங்குள்ள சில மருந்துகளை அவனே காயங்களில் தடவிக் கொண்டான். பிறகு அங்குள்ள ஒரு நாற்காலியில் அமர்ந்து தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்தான். ஆனந்திக்கும் தனக்கும் ஏற்பட்ட ஒரு வாரத் தொடர்பு, நீண்ட நாளைய தன் ஆருயிர்த் தோழனிடத்திலே எவ்வளவு பெரிய பகையைத் தோற்றுவித்துவிட்டது என்று எண்ணினான், அடி வாங்கிய போது வலி மிகுந்த சமயம்கூட வராத கண்ணீர், இப்போது வெள்ளமாக வெளிப்பட்டுக் கன்னங்களைக் கழுவியது.

ஆனந்தியிடமிருந்த எந்தெந்தக் குணநலன்கள் தன்னை வசீகரித்தனவோ அதே குண நலன்களுக்குத்தான் தன் நண்பனும் அடிமைப்பட்டு விட்டான் என்று முடிவு செய்தான். தனக்கு ஏற்பட்ட காதல், அவனுக்கும் ஏற்பட்டதை யார் தடுக்க முடியும்? அவனும் தன்னைப்போல உள்ளங் கொண்டவன்தானே!

அய்யோ! அவன் ஆசைக்குத் தடையாக ஆனந்திக்கும் அவனுக்கும் குறுக்கே தான் வந்து நின்று விட்டோமே யென்று நொந்து கொண்டான்.

அவனது காதல் உள்ளத்திலே கடுமையான தியாகம் உதயமாயிற்று. ஆனந்தியின் மீதுள்ள அன்பையே தியாகம் செய்யத் துணிந்துவிட்டான் நயினா முகம்மது. அவளையும் அழகப்பனையும் ஒன்று சேர்த்து விடுவது என்று உறுதி கொண்டான். பள்ளிப்பருவத்திலே நயினாவும் அழகுவும் சேர்ந்தே திரிவார்கள். அப்போதெல்லாம் ஒரே பண்டத்தின்மீது நயினாவும் அழகுவும் பிரியம் வைப்பார்கள்.

அந்தப் பொருள் ஜோடியாக இருக்காது. அதனால் அழகப்பன்—தான் விரும்பிய பண்டத்தை நயினாவிடம் கொடுத்து அவளைத் திருப்தி அடையச் செய்வான், அழகப்பனால் அது முடிந்தது; காரணம் — அது ஒரு பண்டம்!

நயினா இழப்பது வாழ்க்கையையே அல்லவா? இது மிகப் பெரும் தியாகம் அல்லவா? எதுவாயினும் சரி; காதலைத் தியாகம் செய்தே தீருகிறேன்—அழகப்பன் ஆனந்தியைத் தம்பதிகளாக்குகிறேன், என்று உறுதி செய்துகொண்டு மாடிப் பக்கம் போக எழுந்தான் நாற்காலியைவிட்டு! எழுந்தவன் கீழே விழுந்துவிட்டான்.

அடிபட்ட இடங்களில் அவ்வளவு வலி அவனுக்கு! மெதுவாக எழுந்து, நகர்ந்து நகர்ந்து மாடிப் படிகளைக் கடக்க ஆரம்பித்தான். அழகப்பன் இருந்த அறைக்குள் நுழைந்தான். அவனைக் கண்டதும் அழகப்பனுக்கும் ஒன்றும் புரியவில்லை. கோவெனக் கதறி நயினா முகம்மதைத் தழுவிக் கொண்டான் அழகு!

"அழகப்பா! என் ஆருயிர்த் தோழா! என்னை மன்னித்து விடு! நான்தான் தவறு செய்து விட்டேன். ஆரம்பத்திலேயே ஒரு ஜாடை காட்டியிருந்தாயானால் நான் இவ்வளவு தூரம் நடந்து கொண்டிருக்க மாட்டேன். இப்போதும் ஒன்றும் குடி முழுகிவிடவில்லை. ஆனந்தியை நான் தியாகம் செய்து விடுகிறேன். அவளை நீயே ஏற்றுக் கொள். அவளை இந்த முடிவுக்கு சம்மதிக்கச் செய்வது என் பொறுப்பு!" என்றான் கண்களில் நீர் கலங்கியபடி நயினா,

"வேண்டாம் நயினா! என்னைக் கொல்லாதே இந்த வார்த்தைகளால்! அன்பனே!... அணைத்து மகிழ்ந்து ஆடியோடிக் கிடந்த நமது தூய்மையான நட்பிலே இப்படியொரு தொய்வு விழும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. நான்தான் தவறிழைத்தவன்—நான்தான் துரோகி—நான்தான் பாதகன்!"

அழகப்பன் நயினாவின் காலைக் கட்டிக் கொண்டு புலம்பினான்.

(தொடரும்.)

டி. டி. கே. நிதி மந்திரியானார்!

செப்டம்பர் 16-ம் நாள்

மதுரையில்

அறிஞர் அண்ணா
நாவலர் நெடுஞ்செழியன்
மு. கருணாநிதி

ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

காத்திருப்போம்; 'காலம்' வரும்!

2-ம் பக்கத் தொடர்ச்சி

படியே 'அராபியர்—என்ற சொல்லுக்கு நாளடைவில் விரிவான பொருள் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதிலிருந்து கிடைக்கும் கருப்பொருள் என்ன?

லக்னே பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் டாக்டர் ஆசீர்வாதம் கூறுகிறபடி "காலம்தான் பல சமயங்களில் தேசிய இனத்தை உண்டாக்குகிற சக்தியாக இருக்கிறது!"

திராவிட நாட்டின் எதிரிகளே! மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள்: காலம் தான் பல சமயங்களில் தேசிய இனங்களை சிருஷ்டித்திருக்கிறது!

டாக்டர் ஆசீர்வாதம் கூறுகிற 'காலம்' புராணிகர்கள் குறிப்பிடுகிற இராகு காலமோ, குளிகை காலமோ அல்ல!

ஒரு கொள்கையை மக்கள் மனதிலே நிலேயாக இடம் பெறச் செய்வதற்குத் தேவையான நேரத்தைத்தான் அவர் அப்படிக் குறிப்பிடுகிருர்!

அன்புள்ள தோழர்களே! அரசியல் அறிஞர்கள் குறிப்பிடுகிற அந்தக் 'காலம்' என்கிற ஒரு பொருள் இன்னும் நமக்குப் போதியதாக இல்லே. நம்முடைய பிரிவினை கீதத்தையே இப்போதுதானே பண்ணமைத்துப் பாட ஆரம்பித்திருக்கிருேம்! அதற்குள் அவசரப் படுகிருர்கள்; நம்மை அதைரியப்படுத்துகிருர்கள்; மாற்றுக் கட்சித் தோழர்கள்!

காலம் குறைவு — அதனுல்தான் தமிழகம் தாண்டி இன்னும் எங்கள் கொள்கை அதிதீவிரமாக வேரூன்றவில்லே.

அதனுல்தான் நம்பிக்கையோடு; நியாயம் வெல்லும் என்ற கொள்கையில் உள்ள பக்தியோடு சொல்லுகிருேம் போதிய காலம் கிடைத்தால் தமிழகம் தாண்டியும் எங்கள் கொள்கை வளரும்; பரவும், வாகை சூடும் என்று!

மத்திய கிழக்கிலுள்ள சில அராபியர்களும், தாங்கள் தனி இனமென்பதை உணர்ந்து, ஒரு சகோதர அமைப்பின் கீழ் வருவதற்கு இன்னும் போதிய காலம் தேவைப்படுகிறது!

அதேபோலவே திராவிட நாட்டுக் கோரிக்கையை ஆந்திர, கேரள, கன்னடியர்களும் ஒப்புக் கொள்வதற்கு இன்னும் நமக்கு அதிக காலம் தேவைப் படுகிறது.

உங்கள் பிரிவினை முழக்கத்தை ஆந்திரா—ஆமோதிக்கவில்லேயே; கேரளம் கேட்கவில்லேயே; கன்னடம் கவனிக்கவில்லேயே—என்று கண்டனக்

> ★ டாக்டர் ஆசீர்வாதம் கூறுகிற 'காலம்' என்பது புராணிகர்கள் குறிப்பிடுகிற 'இராகு காலம்', 'குளிகை காலம்' அல்ல! ஒரு கொள்கையை மக்கள் மனதிலே நிலேயாக இடம் பெறச் செய்வதற்குத் தேவையான நேரத்தைத்தான் அவர் அப்படிக் குறிப்பிடுகிருர்! ★

கணை தொடுப்போர் அனைவரும் ஒன்றை மட்டும் மறைமுகமாக ஒப்புக் கொள்கிருர்கள்: தமிழகத்தில் திராவிட இயக்கத்தவர் போதிய ஆதரவு பெற்றிருப்பதை அவர்களால் மறைக்க முடியவில்லே!

சிறு குழந்தைகளைப் பற்றி கதையொன்று சொல்வார்கள்: முரடன் ஒருவன் பசு போன்ற சாதுவான பையனை அடித்து விட்டானும், பள்ளிக்கூடத்தில்! அடிபட்டவன் உடனே ரோஷம் தாங்கமாட்டாமல், "என்னை இங்குதானே உன்னுல் அடிக்க முடிந்தது; எங்கள் தெருவுக்கு வந்து என் மீது கை வைத்துவிட முடியுமா?"—என்று கூவினனும்.

முரடன் அப்போதும் விட்டானில்லே. நேராக அவன் தெருவுக்கே சென்று அவன் கன்னத்தில் ஒரு அறை விட்டானும்.

அடிபட்டவனே அப்போதும் தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லே. "சரி; சரி, என் தெருவில் வந்துதானே என்னை அடிக்க முடிந்தது. எங்கள் வீட்டுக்குள்ளே வந்து என்னைத் தொட முடியுமா, பார்!"—என்று மீசை இருப்பதாக நினைத்துக் கொண்டு தடவிக் காட்டினனும்.

பள்ளிக் கூடத்திலே அடி வாங்கியவன், எங்கள் தெருவுக்கு வந்து 'என்னை அடித்து விட முடியுமா?' என்று கேட்கிருன், உதை விழுந்த முதுகைத் தடவிக் கொண்டே!

அது போலவேதான் தமிழகத்தில் நாம் தரும் "இலட்சியக் குத்துக்களை" வாங்கிக் கொண்டவர்கள், வெம்பி நசுங்கிப்போயிருக்கும் தங்கள் கட்சி அமைப்பை கண்ணீர் மல்க பார்த்தபடியே, "ஆந்திராவில் சென்று உங்கள் கொள்கையை நிலேநாட்ட முடியுமா?" என்று கேட்கிருர்கள்.

தமிழ் நாட்டில் திராவிடர் இயக்கம் எவரும் உதாசினப் படுத்திவிட முடியாத அளவுக்கு; எதையும் சாதித்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு வளர்ந்திருக்கிறது,

தமிழகத்தின் ஒவ்வொரு வாழ்க்கைத் துறையிலிருந்தும் தங்களை திராவிடர் இயக்கத்தில் அங்கத்தினராகப் பதிவு செய்து கொண்டோர் பலரிருக்கிருர்கள்!

அரசாங்க அறிக்கையிலேயே மேற்கோள் காட்ட வேண்டுமானுல்—திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும் ஒரு லட்சம் அங்கத்தினர்கள் இருக்கிருர்கள்!

தமிழகம் திராவிட நாட்டுப் பிரிவினைக்கு ஓரளவு பக்குவமடைந்து விட்டது.

அதாவது போர்க் களத்திற்குத் தேவையான வாள், கேடயம், ஈட்டி போன்ற பல கருவிகளில் ஒரு கருவி தயாராகி விட்டது. மீதமுள்ள கருவிகளும் தயாராகட்டும் என்பதற்காக நாம் போருக்குப் போகமலேயே இருக்க வேண்டுமா? படை முகம் நோக்கிப் பயணமானுல் அதற்குள் அந்த ஆயுதங்கள் தயாராகிவிடுமே; பின்னர் அவைகளை உபயோகப் படுத்திக் கொள்ளலாமே?—இப்படி ஒரு எண்ணம் சிலருக்கு எழுந்திருக்கிறது.

தமிழகத்திலே ஒரு சக்தியை வைத்துக்கொண்டு நாம் ஏன் வீணுக உட்கார்ந்திருக்க வேண்டும்?—என்று சிலர் மனதுக்குள்ளேயே கேட்டுக் கொண்டிருக்கிருர்கள்.

எனவே பக்குவமடைந்திருக்கும் தமிழ் நாட்டைக் கொண்டே பிரிவினை முழக்கத்தை எழுப்பிவிடலாமே; பிறகு ஆந்திர, கேரள, கர்நாடகப் பகுதிகள் அதனுடன் இணைந்துகொள்ளலாமே—என்றும் யோசனை செய்கிருர்கள்.

தமிழ் நாடே திராவிட நாடு என்னும் 'வாபஸ் வாதத்'தை யல்ல இங்கு குறிப்பிடுவது; முதலில் தமிழ் நாடு—பிறகு, திராவிட நாடு — என்று கூட நாம் திட்டம் தீட்டிக்கொள்ள இடமிருக்கிறது!

உதாரணமாக ரஷ்யாவையும், அயர் பூமியையும் எடுத்துக்கொள்வோம்.

ரஷ்ய நாட்டுக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் நோக்கம் முழுப் பொதுவுடமை — அதாவது சோசலிசத்துக்கு அப்பாற்பட்ட கம்யூனிசம்!

ஆனுல் துணிவுடன் இன்று ரஷ்யா ஒப்புக்கொள்கிறது நாங்கள் அடைந்திருப்பது சோசலிசத்தைத்தான்; கம்யூனிசத்தை அடைய நாங்கள் இன்னும் வெகுதூரம் பிரயாணம் செய்ய வேண்டுமென்று!

சீன நாட்டிலும் இதே நிலேமைதான்! சோஷலிசம் தான் அங்கு பூத்துக்கொண்டிருக்கிறதே தவிர, கம்யூனிச மணம் கமழ செஞ்சீனம் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்!

இன்னெரு உதாரணம் அயர் பூமி!

விடுதலேபெற்ற அயர் நாட்டோடு அல்ஸ்டர் என்னும் மாகாணம் சேர்க்கப்படவில்லே. அதாவது திராவிட நாட்டைக் கொடுத்துவிட்டு தஞ்சை மாவட்டத்தை மட்டும் டெல்லி தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டால் எப்படியிருக்குமோ அப்படிச் செய்துவிட்டது ஆங்கில ஏகாதிபத்தியம், அங்கே!

ஆனுல் அயர் நாட்டுக்கு அரசியல் சட்டம் அமைத்தவர்கள்

தொடர்ச்சி 10-ம் பக்கம்

திராவிட நாடு விடுதலே (பிரிவினை) வாரம் கொண்டாடுவீர்!

★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க நாளான

17—9—56-ஆம் நாளிலிருந்து 23—9—56-ஆம் நாள்வரை

திராவிடநாடு விடுதலே (பிரிவினை) வாரமாகக்

கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும், கழகச் சார்புள்ள அமைப்புகளையும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச நாடக அரங்குகள் ஆதியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்திக் கருத்து விளக்கம் செய்யுமாறு மகிழ்ச்சியோடு கேட்டுக்கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை—13.
1—9—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

உதய சூரியன்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ஐம்பதாயிரத்துக்கு விற்கப் போகிறுனு மடையன்!

கண்: ஆமாம், அந்தப் பணத்தைச் செலவழித்து அப்பா எம். எல். ஏ. வாகவும் ஆகப் போகிறுர்.

கறுப்; பணமும்போய் எலக்ஷனிலும் தோற்று விட்டால்?...

கண்: அடுத்த எலக்ஷனில் நிற்பார்!

கறுப்: அப்படின்னு உனக்கு ஒரு தங்கை யிருக்க வேண்டுமே!...அவளை விற்றுத் தானே அடுத்த எலக்ஷனிலே நிற்க முடியும் அவரால்! எம்மா; உங்கப் பாவை அரிச்சந்திரன் மாதிரி எதையும் விற்று விடச் சொல்லாதே!

[அதைக் கேட்ட கண்ணம்மா கோபமுற்று, அவனை அறைந்து விடுகிறுள் படபடப்புடன்]

கண்; நிதானமாப் பேசுங்க!...

கறுப்: நிதானமாத்தான் பேசினேன். என்னை மன்னித்துவிடு!...தங்க விக்ரகம் மாதிரி இருக்கிற உன்னைக் கொண்டு போயி ஒரு குரங்கு கழுத்திலே கட்டப் போறத்தைக் கேட்டதும், எனக்கு மனம்குமுறி விட்டது. ஆத்திரத்தில் ஏதேதோ சொல்லிவிட்டேன். நீ கொடுத்த அறையிலே...சாப்பிட்ட இட்லி, தோசை, காபி எல்லாம் எங்கேயோ போய்ட்டுது! நான் கோபத்தில்தான் சொல்லிவிட்டேன். அதுக்காக நீ என்னை அடிச்சிருக்க வேண்டாம். நீ ஏன் என்னிடம் உன் கல்யாண விஷயத்தைப் பற்றிப் பேசணும். நீ பேசியதால் தானே நான் அபிப்பிராயம் சொன்னேன். அடி வாங்கினேன். (அழுதபடி பேசுகிறுன். அதைக் கண்ட கண்ணம்மா மன மிளகி விடுகிறுள்)

கண்: மன்னிச்சிடுங்க!......என்னைப் பத்தி எங்கப்பாவைப் பத்தி எது வேணுமானாலும் பேசுங்க! செத்துப் போன எங்கம்மா உத்தமி! அவர்களைப் பத்தி ஒண்ணும் பேசாதிங்க!

கறுப்: நான் பேசினது தப்புதான்...கண்ணம்மா பேசினது நானல்ல!......பேசினது...அதோ! அதோ!!... (என்று காந்தி படத்தைக் காட்டுகிறுன்)

கண்: காந்தியா பேசினுரு?...

கறுப்: இல்லே; அவருக்குப் பின்னுலே அவுரோட பரம விரோதி ஒரு பயல் ஒளிஞ்சிகிட்டு உட்கார்ந்திருக்கான்; அவன்தான் பேசினுன்!

[கண்ணம்மா போய்ப்பார்க்கிறுள். அங்கே படத்தின் பின்னே மதுப்புட்டியிருக்கிறது.]

கண்: அய்யய்யோ—இதையா சாப்பிட்டீங்க?...

கறுப்: ஆமாம்! ஏன்; சாப்பிடக் கூடாதா?...தண்ணி தாகமா இருந்தது—ஏதோ 'ஷர்பத்' இருக்கே அப்படின்னு எடுத்து சாப்பிட்டேன்.

கண்: 'ஷர்பத்' அல்ல இது! கொடிய மது!

கறுப்: கொடியமது!...அய்யோ மதுவா? நான் பார்த்ததேயில்லியே...மது, இப்படி கூட இருக்குமா?......... வெள்ளையாவுல்ல இருக்கும்.

கண்: இது மேல் நாட்டு சரக்கு! உங்களுக்குப் பழக்கமே யில்லியா?...... அய்யோ என்ன செய்யுமோ தெரியலியே!...

கறுப்: ஆகா!...மதுவா சாப்பிட்டுவிட்டேன் நான்! மதிமோசம் போனேன்—மகாத்மாவின் பாதையிலேயிருந்து தவறிவிட்டேன். கண்ணம்மா ஒரு முழக் கயிறு கொடு!......தூக்கு மாட்டிக் கொள்கிறேன். இந்தத் துரோகி இனிமேல் உலகத்தில் வாழக் கூடாது! மதுவைத் தீண்டியவன் மடிந்தே தீர வேண்டும். நான் சாக வேண்டும். சாகவேண்டும். அடே சண்டாளப் பயலே! நீ சாகத்தானடா வேண்டும்!

கண்: ஸ்!...பேசாமலிருங்கள்.

கறுப்: கண்ணம்மா! (என்று அவள் மீது சாய்கிறுன். அவள் அவனைத் தாங்கிப் பிடித்துக் கொள்கிறுள்.)

கறுப்: கண்ணே........உன்னை நான் காதலிக்கிறேன்—நீ என்ன சொல்லுகிறுய்?

கண்: ஸ்! பிறகு பேசிக் கொள்ளலாம்.

கறுப்: பிடிக்க வில்லையா என்னை — நான் குடிகாரன்னு நினைச்சு வெறுக்கிருயா? அந்த ஆனை மூஞ்சிப் பிள்ளையைவிட நான் எவ்வளவோ அழகன்... தவறிப் போயி குடிச்சுட்டேன் தங்கம்; என்னை மன்னிச்சுடு கண்ணம்மா!

கண்: சரி சரி மன்னிச்சுடுறேன்,

கறு: காதல் சங்கதி?

கண்: அதெல்லாம் பிறகு?

கறுப்; சம்மதமா இல்லியா; அதை முதல்ல சொல்லிடு—

கண்: இதெல்லாம் அவ்வளவு அவசரமா சொல்ற விஷயமா?

கறுப்: ஏழையா இருக்கானேன்னு யோசிக்கிறியா? உங்கப்பாவை நான் எம். எல். ஏ. வாக ஆக்கிடுறேன். ஆனை மூஞ்சிப் பிள்ளை ஐம்பதினுயிரம் கொடுத்தா அதை வாங்கி உங்கப்பா எலக்ஷனுக்குத் தானே செலவழிப்பாரு! அந்த செலவு இல்லாம நான் அவரை எம். எல். ஏ. ஆக்குவேன். அவரு என்னை மாப்பிள்ளை யாக் கட்டும்!...

கண்: நீங்களும் என்னை விலைக்கு வாங்கத்தான் பார்க்கிறீர்களா?

கறு: உன் அப்பாவைத் திருப்திப்படுத்த வேறு வழி?...

கண்: சரி......அப்புறம் பேசலாம், அப்பா வந்தாலும் வந்து விடுவார்!

கறுப்: உங்கப்பாவையே நான் கேட்கட்டுமா?

கண்: அய்யோ வேண்டாம். அப்பா வருவதற்குள் போய் விடுங்கள். இன்றிரவு தோட்டத்தில் சந்திக்கிறேன். அவசியம் இரவு பத்து மணிக்கு வாருங்கள்.

கறுப்: காதல் சந்திப்பா? அல்லது; வெறும் சிநேகித சந்திப்பா?

கண்: பொதுவா ஒரு சந்திப்பு!...

கறுப்: மணி எத்தனைக்கு?

கண்: இரவு பத்துக்கு!

கறுப்: அப்ப; காதல் சந்திப்புதான்! போதை தெளிஞ்சா மறந்தாலும் மறந்துடுவேன். நான் இங்கயே படுத்து தூங்குறேன். என்னை ராத்ரி நீயே தோட்டத்துக்கு அழைச்சிகிட்டு போயேன்.

கண்: (கோபமாக) சொன்னு கேக்கணும்—உடனே போங்க அப்பா கண்ணில் படாமல்! ராத்ரிக்கு வாங்க...

கறுப்: கோச்சுக்காதே—நான் வர்ரேன்!......எக்ஸ்யூஸ்மி டார்லிங்! சாரி! வெறி சாரி! நைட் மீட் பண்றேன்.

(தள்ளாடியபடி வெளியேறுகிறுன்)

கண்: (தனக்குள்) எவ்வளவு அழகாயிருக்கிறுர் இந்த ஏழை வாலிபர்! அறிவாளி! அதோடு ஒழுக்க சீலர்! தெரியாத்தனமாக மது வருந்தி விட்டுத் தவிக்கிறுர் பாவம்! இந்தத் தியாக இளைஞரின் இருதயத்திலே எனக்கு இடங்கிடைப்பது என்னைப் பொருத்தவரையில் "அதிர்ஷ்டம்"தான்! என் தந்தையைப் பொருத்தவரையில் "தரித்திரம்" என்பாரே!...

(அப்போது, சமயோஜிதம், பலவேஷம், ஆனைமூஞ்சிப் பிள்ளை ஆகியோர் வருகிறுர்கள்)

சமயோ: கண்ணம்மா!... நில்லு—நில்லு—உள்ளே ஓடாதே! இவாள்தான் கோடீஸ்வரர் ஆனைமூஞ்சிப் பிள்ளை!...நமஸ்காரம் பண்ணிக்க!

[ஆனை மூஞ்சிப்பிள்ளை, தன் விகாரமான முகத்திலே சிரிப்பு காட்டுவது இன்னும் விகாரமாயிருக்கிறது. கண்ணம்மா உள்ளே போய்விடுகிறுள்.]

சமயோ: (ஆனைமூஞ்சியிடம்) என்ன; பெண் பிடிச்சிருக்குதா?...

ஆனைமூஞ்: ரதி! ரம்பை! ஊர்வசி! மேனகை! நாலு பேரையும் ஒரு அச்சிலே ஊத்தி வார்த்தது மாதிரியிருக்கு—

பலவே: அப்ப முகூர்த்த தேதியை சீக்கிரம் வச்சிடலாம்!...

ஆனைமூஞ்: சந்தேகமில்லாம வச்சிடலாம்!...

சமயோ: சரிவாங்க...உள்ளே போயிசாப்பிடலாம்........ கண்ணம்மா! கண்ணம்மா!! நீயே பரிமாறம்மா!...

(என்று ஆனைமூஞ்சியுடன் உள்ளே போகிறுர். பலவேஷம் படத்துக்குப் பின்னே கையை விட்டுப் பார்த்து, காலிபாட்டிலாக இருப்பதைக் கண்டு ஏமாறுகிறுர்.)

பலவே: இதுயார் வேலையா இருக்கும்?...ஓகோ கோ... அந்தக் கறுப்பன் பயல் வேலையா?...நமக்குத் தெரியாம விஷயத்தை முடிச்சிட்டு போய்ட்டானே!... இருக்கட்டும்! இருக்கட்டும்!! குடிகாரப் பயல்!

[என்று ஒரு டம்ளர் தண்ணீரை—காலிப்புட்டியில் ஊற்றி—குலுக்கி சாப்பிடுகிறுர்.]

(திரை விழுகிறது.)

—தொடரும்—

திரு ஜி. பி. சோமசுந்தரம் அவர்களின் புதல்வர் காங்கேயன்—தோழியர் மங்களம்மாள் திருமணம், 19—8—56 அன்று பேளுக்குரிச்சியில் அறிஞர் அண்ணு தலைமையில் சிறப்புற நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

பலவீனமல்ல...

✻ 8-ம் பக்கத் தொடர்ச்சி.

வாளாவிருக்க வில்லை. இன்றில்லாவிட்டால் நாளை—நாளை இல்லையேல் நாளை மறுநாள் அல்ஸ்டர் நம்மோடு சேரத்தான் போகிறது—என்ற திட நம்பிக்கையில், அதற்கும் சேர்த்து அரசியல் சட்டம் தயாரித்துக்கொண்டார்கள்!

இந்த இரு உதாரணங்களையும் இப்போது திருப்பிச் சொல்லிப் பார்ப்போம்.

எப்படி ரஷ்யாவும், சீனவும் சோஷலிசத்தின் வழி கம்யூனிசத்தை அடையப் போகின்றனவோ, அவ்வாறே தமிழ்நாட்டைப் பிரிவினைக்குத் தயார் செய்து கொண்டு ஏனைய பகுதிகளான ஆந்திர, கேரள, கர்னடகப் பகுதிகளை நாம் பிறகு நெருங்கலாம்!

அது போலவே, எவ்வாறு தனித்து நிற்கும் அல்ஸ்டர் மாகாணம் தன்னுடன் எப்படியும் ஒருநாள் இணைந்து விடும், இணைந்து தான் தீரும் என்ற நம்பிக்கையில் அயர் பூமி அதற்கும் சேர்த்து அரசியல் சட்டத்தை உண்டு பண்ணிக்கொண்டிருக்கிறதோ, அதே போலவே தமிழகத்தை மட்டும் முதலில் பக்குவப் படுத்திக் கொண்டு பிற திராவிட மொழிப் பிரதேசங்களை அணுகுவதற்கும் நமக்கு வாய்ப்பிருக்கிறது!

ஆனல் திராவிட முன்னேற்றக் கழகம் சிலருடைய இந்த அவாவிற்கும் இடம் வைக்கவில்லை.

"ஆந்திரம், கர்னடகம், கேரளம் ஆகிய பகுதிகளில் கிளைக் கழகங்களைத் தோற்றுவிக்கவும், கழகக் கருத்துக்களைப் பரப்புவதற்கும் பொதுச் செயலாளர்—குழு ஒன்றினை நிறுவி, ஐயாயிரம் ரூபாய்கள் வரை செலவிடவும்,"

திருச்சி மாநாடு தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது.

டாக்டர் ஆசீர்வாதம் குறிப்பிட்டிருக்கிறபடி 'காலம்' என்னும் ஒரு பொருள் நமக்குக் கிடைக்கக் கிடைக்க, நம்முடைய பிரிவினைக் கொள்கை தமிழகத்தின் எல்லை தாண்டி வளர்ந்து கொண்டுதான் போகுமென்பதில் சிறிதும் ஐயப்பாட்டிற்கு இடமில்லை.

'காலம்தான் பல தேசிய இனங்களை அமைத்திருக்கிறது'

அந்தக் 'காலம்'தான் நாளை திராவிட தேசிய இனத்தை அமைத்து, அதற்கு விடுதலையை வாங்கித் தரப்போகிறது.

அப்படியானல் ஆந்திர, கேரள, கன்னடியர்களிடையே திராவிட இன உணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு எவ்வளவு 'காலமா'கும்?

அது இரு சக்திகளைப் பொறுத்து இருக்கிறது.

(1) நமது பிரசார வேகம்.

(2) மத்திய அரசாங்கத்தின் போக்கு.

—இவை இரண்டும் தான் அந்தக் 'காலத்'தை நிர்ணயிக்க வேண்டும்.

இதைப் படித்து விட்டு, 'மத்திய அரசாங்கத்தின் போக்கிற்கும் திராவிட தேசிய இனங்களின் ஒற்றுமைக்கும் என்ன தொடர்பு' என்று வினவத் தோன்றும்.

தொடர்பு இருக்கிறது; நிச்சயம் நிறைய இருக்கிறது.

மத்திய அரசாங்கம் தென்னகத்தை மேலும் மேலும் புறக்கணிக்கத் துவங்கினல், "நாம் வடநாட்டவரிடமிருந்து மாறுபட்டவர்கள் போலிருக்கிறது. அதனல்தான் சேட்டுகள் நம்மைப் பகிஷ்கரிக்கிறர்கள்" என்ற எண்ணம் இதர திராவிட மக்களுக்குக் குருத்து விட்டுக் கிளம்பி வளரும்!

அவ்வாருனல் மத்திய அரசாங்கம் தென்னகத்திற்கு அநீதி இழைக்காமலிருந்து விட்டால்?

—இந்தக் கேள்வியும் தோன்றலாம்.

ஆனல் இது நடக்காத காரியம். மத்திய அரசாங்கம் என இருந்து; அதில் வட நாட்டுக்காரர்களின் ஆதிக்கம் அதிகம் இருந்தால் அது நமக்குக் கொடுமை இழைத்துக்கொண்டு தான் வரும்.

பாம்பு தவளையை விழுங்குவதைப் போல; கொக்குமீனைக் கொத்துவதைப் போல மத்திய அரசாங்கத்தின் வேலையே நம் போன்ற அமுக்கப்பட்ட பிராந்தியங்களை வாயில் போட்டுக் கொள்வதுதான்! நேருவுக்குப் பிறகு வாரிசுதார்கள் இவரை விட இன்னும் இரக்கமற்ற கொடுமையாளர்களாகத் திகழ்வார்கள்!

ரப்பர் பந்து உதைத்தால் உயர எழுவதைப்போல், திராவிடர் இயக்கம், வட நாட்டவர்கள் நமக்கு தரும் சுரண்டல் என்னும் உதைகளால் உயர எழுந்துதான் தீரும்!

அந்தக் 'காலம்' நம்முடைய ஆயுட் காலத்திற்குள்ளேயே வந்து விட்டால் நாம் பெரு மகிழ்வு அடைவோம்; நம் குழந்தைகள் காலத்தில்தான் அது வரும் என்ருல் நமக்கு சிறிது வருத்தம் ஏற்படத்தான் செய்யும்! அப்போதும் இதயம் இரும்பூதெய்துவதற்கு இடமிருக்கிறது; நம் குழந்தைகளாவது வட நாட்டுக்குக் காவடி தூக்கும் அடிமைகளாக இல்லாமல், சுதந்தர திராவிடத்தின் பிரஜைகளாக இருக்கப் போகிறர்கள் — என்பதை நினைக்கும்போது யாருடைய மனம்தான் பூரிப்படையாமலிருக்கமுடியும்?

மாறன், எம். ஏ.

பெரியகுளாப்பாடி (வ. ஆ. மாவட்டம்)

20—9—56 வியாழன் மாலை 6 மணிக்கு, பழைய தெருவில் தோழர் சி. ரேணு அவர்கள் தலைமையில், தோழர்கள் ப. உ. சண்முகம், இராகவன், வ. குமாரசாமி, தொ. கணேசன்—ஆகியோர் பேசுவர்.

அய்யம்பப நாய்க்கனூர்

21—9—56 மாலை 6 மணிக்கு பள்ளியின் முன், தோழர் இராசு, பரமசிவம் அவர்கள் தலைமையில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மதுரைமுத்து, வசனப்பித்தன், முகதாஇராசன் — ஆகியோரும் பேசுவர்.

மதுரையில் திராவிடநாடு பிரிவினை நாள்

மதுரை நகரில் செப். 16-ம் தேதியன்று திராவிட நாடு விடுதலை நாள் விழாக் கூட்டத்தில் அண்ணு அவர்கள் கலந்து கொள்வார்.

அன்று பகல், தோழர் மு. கருணநிதி அவர்கள் நகரின் முக்கிய இடங்களில் எல்லாம் கழகக் கொடி யேற்றுவிப்பார்.

மாலையில் தியாகராயர் படிப்பகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்படும். இரவு 7 மணிக்கு திலகர் திடலில் நடைபெறும் கூட்டத்தில் அண்ணு, மு. கருணநிதி, எஸ். முத்து முதலியோர் பேசுவார்கள்.

பேரையூர்

16—9—56 ஞாயிறு அன்று பெருமாள் கோவில் முன்பு நடைபெறும் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, எம். ஏ. ரசாக், க. ம. வ. நடராசன்—ஆகியோர் பேசுவர்.

திருக்கோகர்ணம்

16—9—56 ஞாயிறு மாலை 6 மணிக்கு குமரவேல் நினைவு மன்ற இரண்டாவது ஆண்டு விழா நடைபெறும். தோழர் எஸ். வி. சுப்பையா அவர்கள் தலைமையில், தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கோவிந்தன், டி. பி. கிருஷ்ணன்—ஆகியோர் பேசுவர்.

கருங்குளம்

19—9—56 புதன் மாலை 6 மணிக்கு, வ. உ. சி. திடலில், தோழர் மு. மதியரசு அவர்கள் தலைமையில், தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், சு. வன்னியபெருமாள்—ஆகியோர் பேசுவர்.

—) ● (—

பத்தாவது பிறந்த தினம்

11--ம் பக்கத் தொடர்ச்சி

கிட்டுக் கொள்வார்கள். அந்த நண்பன் தன் வீட்டு கூர்க்காவினலேயே அடிபடுவதா?

"டேய் கூர்க்கா! விட்டு விடு அவனை...!" என்று கத்தினன் மாடியிலிருந்தே!

அதே சமயம் அவனது வாயைப் பொத்தினர் மாளிகைக்கார சின்னதுரை. "சுந்தர்! உன் அற்பபுத்தி இன்னும் போகலியா?" என்ருர்.

"அவன் என் நண்பன் அப்பா!" என்று அலறினன் சுந்தர்.

பிறந்ததின விழாவிற்கு வந்திருந்த பெருங்கூட்டம் திகைத்துப்போய் நின்றது. ஜமீன்தாரின் மகனுக்கு, நாயோடு போட்டியிடும் நலம் கெட்டவன் நண்பன? ஏளனக் குறி தோன்ற ஏறிட்டு நோக்கினர்.

"உனக்கும் இரண்டு வருடங்களாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன், சோதாப் பயல்களைக் கண்டு ஏன் இரக்கப்படுகிருய்?"

"அது மனிதத் தன்மையப்பா!"

மறுகணம் சுந்தரின் கன்னத்தில் 'பளார்' என்று ஒரு அடி விழுந்தது. "சூ...சூ" என்று பல குரல்கள் ஏக காலத்தில் எழும்பின.

மறுகணம் சுந்தர் அவரது முகத்தை ஒரு முறை ஏறிட்டு நோக்கினன். உடனே விறு விறு என்று வெளியே நடந்தான்.

இரண்டு வருட காலமாக ஜமீன்தார் சின்னதுரை தனது வளர்ப்பு மகனின் உள்ளத்திலே தூவிய விஷத்துக்கு அகங்காரம்; ஆணவம்—என்ற எருக்கள் கிடைக்கவில்லை; நசித்துவிட்டது விஷம்!

அவனது பத்தாவது பிறந்த தினம் அவனது விடுதலை தினம்! அவன் மறுபடியும் சிவசண்முகசுந்தரமாகவே மாறிவிட்டான்!

—'சொர்ணம்'

'முரசொலி'

இலங்கை, உள் நாடு

ஆண்டு சந்தா	6–0–0
6–மாத சந்தா	3–8–0

வெளிநாடு

ஆண்டு சந்தா	7–0–0
ஆறுமாத சந்தா	4–0–0

"உன் பெயரென்ன?"

வழவழப்பான சிமெண்ட் தரை—கண்ணாடிபோல் முகம் தெரியும் சலவைக் கல் சுவர்—உயர உயரமான மணித் தூண்கள்—அந்த அழகான மாளிகைக்கு, தான் ஏன் அழைத்து வரப் பட்டோம்—என்ற குழப்பத்தில் மூழ்கிக் கிடந்த அவனுக்கு திடீரென்று பதில் சொல்ல முடியவில்லை.

"..ம்...உன் பெயர் என்ன?"

"சிவ சண்முக சுந்தரம்!..."

"சட், என்ன பெயர் இது? கெஜ நீளம்!...இனி உன் பெயர் சுந்தர்....தெரிகிறதா?......இப்போது சொல், உன் பெயரென்ன?..."

"சிவ...இல்லை...சுந்தர்!"

"அழகாக இருக்கிறதல்லவா? இனிமேல் நீ இங்கேயேதான் இருக்க வேண்டும்! குப்பைமேடும், பாழ் மண்டபமும், ஆற்றங்கரை மணல் மேடும் நீ பார்க்கவும் கூடாத பாவ பூமிகள்!...நீ இந்த வீட்டு இளைய முதலாளி மாதிரி! உன் அழகான முகத்தில் கவலை தேய விடமாட்டார்கள்; உடலில் அழுக்கு படிய விடமாட்டார்கள்; இங்கிருக்கும் ஏராளமான பணியாட்கள்! நீ உன் பழைய நண்பர்களை எல்லாம் மறந்தேவிட வேண்டும்!........ வெளியே செல்வதென்றால் கார் இருக்கிறது; தாதிகள் இருக்கிறார்கள்! தெரிகிறதா?..."

அந்த மாளிகைக்கு சொந்தக்காரர் என்னதான் சொல்லுகிறார் என்று அவனுக்குப் புரியவே யில்லை; எட்டு வயதுச் சிறுவன்தானே! குப்பை மேட்டிலே கிடந்த அந்த அனாதைச் சிறுவனின் அழகும், தோற்றமும், குழந்தை யற்ற அவரது மனதைக் கவர்ந்ததும், ஆகவே அவனை தனது வளர்ப்புப் பிள்ளையாக ஆக்கிக்கொள்ள திட்டமிட்டுவிட்டதும் — அவனுக்கு அப்போது புரியவில்லைதான்! இருந்தாலும் எதையோ கூர்ந்து கேட்பதுபோல் கேட்டுக் கொண்டிருந்தான். எல்லாவற்றுக்கும் தலையை ஆட்டினான்.

"சரி........போ!" என்றார் அவர்.

பக்கத்தில் தயாராக நின்று கொண்டிருந்த வேலைக்காரன் அவனை அழைத்துக்கொண்டு சென்றான்.

சுந்தர் குளிப்பாட்டப் பட்டான்; புத்தாடைகள்—தங்க நகைகள் அணிவிக்கப் பட்டான். என்ன ஆச்சரியம்; சிவ சண்முக சுந்தரம் மாறியே விட்டான்!

உடையில், தோற்றத்தில் மட்டும்தான் அவன் மாறினான். ஆனால் உள்ளத்தால் அவன் மாறவேயில்லை! மாளிகையின் பொலிவைக் கண்டு வியந்த அவனது கண்கள் அவன் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்த மண்குடிசைகளை ஏனோ மறக்க மறுத்தன. அறுசுவையோடு 'மேஜை உணவு' அவனுக்குக் கிடைத்தது; ஆனாலும் தெரு நாயோடு போட்டியிட்டுக் கொண்டு எச்சல் இலைகளைத் தேடி ஓடும் அவனது நண்பர்களை அவனால் மறக்கவே முடியவில்லை! பைத்தியக்காரன், எனக்கென்று உணவு கிடைத்தது; உல்லாச வாழ்வு கிடைத்தது; மாற்றாரைப் பற்றி எனக்கென்ன கவலை?—என்று கருதியிருக்கலாம் அவன்! ஆனால் சூதுவாதற்ற அந்த இள உள்ளமோ, அமைதியிழந்து தவித்தது.

ஒரு நாள்...

சுந்தர் பள்ளியிலிருந்து மாளிகைக்குத் திரும்பினான். காரின் கதவைப் பணியாள் பணிவுடன் திறந்துவிட்டான். அவன் என்றுமில்லாத மகிழ்ச்சியுடன் கீழே இறங்கினான். அன்றைய தினம், தான் செய்த மிக நல்ல காரியம் ஒன்றை தன் தந்தையிடம் சொல்லிப் பெருமைப்பட வேண்டுமே என்பதற்காக! ஆனால்...உள்ளே நுழைந்ததும் அவன் திடுக்கிட்டு விட்டான்.



அங்கே கோர சொரூபமாய் நின்று கொண்டிருந்தார் மாளிகைக்காரர்!

"எங்கே உன் சட்டை?" என்று உறுமினார் அவர்.

சுந்தர் நடுங்கிவிட்டான். அவரோ சட்டை யற்றிருந்த அவனது வெறும் உடம்பைப் பிடித்து உலுக்கினார். "தெரியும் எனக்கு! இனி ஒருமுறை இம்மாதிரி செய்தால் நான் சும்மா இருக்க மாட்டேன், ஜாக்கிரதை!" என்றார். அவனைப் பிடித்து கோபமாகத் தள்ளினார். கட்டிலில் போய் விழுந்தான் சுந்தர்.

சற்று நேரம் கழித்து அவனது விம்மல் ஒலி மட்டும் கேட்டது. அடியேதும் பட்டிருக்கலாமோ? இல்லை; ஆனால், அவனது உள்ளத்தில் பலமான தாக்குதல் ஏற்பட்டு விட்டது! அதன் வேகத்தைத் தாங்க முடியாத அவனது நெஞ்சம் விம்மியதில் வியப்பில்லைதான்! இத்தனைக்கும் அவன் செய்த தவறுதான் என்ன? அவனது மேல்சட்டைதான் எங்கு போயிற்று?

பள்ளியிலிருந்து திரும்பும் போது சாலையோரத்திலே ஒரு வேதனையான சம்பவத்தைக் கண்டான் அவன். இரு பணக்காரச் சிறுவர்கள், ஒரு தோட்டக்காரனின் மகனை சித்திரவதை செய்து கொண்டிருந்தார்கள். தோட்டத்திலிருந்து மாங்காய் பறித்தார்களாம் அவர்கள். தந்தைக்குத் தெரிந்தால் தன்னைக் கோபிப்பார்; ஆகவே போய்விடுங்கள்—என்றானாம் தோட்டக்காரன் மகன். தவறாம் அது; தகுதியைக் குறைத்துவிட்டானாம் அவன்; தண்டனை தர வேண்டாமா அதற்கு? பாவம், அந்தச் சிறுவனின் சட்டையை சுக்கல் சுக்கலாகக் கிழித் தெறிந்தார்கள். அடித்தார்கள்; உதைத்தார்கள்; "ஐயோ" என்று அழுது புரண்டு மூர்ச்சிக்கு மளவுக்கு வதைத்தார்கள். அதைக் கண்ட பின்னும் சுந்தர் சும்மா இருப்பானா? காரை நிறுத்தி கீழே இறங்கினான். அந்தப் பணக்காரச் சிறுவர்களை விரட்டிவிட்டான். ஏழைச் சிறுவனைத் தூக்கினான். மூர்ச்சை தெளிவித்தான். தன் சட்டையைக் கழற்றி அவனுக்கு அணிவித்தான்......நடந்தது இதுதான்! இதிலென்ன தவறு கண்டுவிட்டார் தந்தை? ஒரு சட்டைபோனது மாபெரும் இழப்பா, என்ன? விதம் விதமாக பலவித வண்ணங்களில் பெட்டியில் அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றனவே, ஏராளமான உடைகள்! பின் ஏன் அவன் செய்ததை தவறு என்கிறார்கள்? விடை காண முடியவில்லை அவனால்; விம்மல் ஒன்றைத்தவிர!

சற்று நேரம் சென்றபின் அவனது 'அப்பா' வந்தார். கோபம் குறைந்து விட்டது போலும்; "அழாதே!" என்றார்; அன்போடு அழைத்தார். உணவருந்தச்சென்றார்கள் இருவரும். உணவோடு 'விஷ'த்தையும் ஊட்டினார், அவர். "நீ முன்னைப்போல் தெருப் பையன் இல்லை இல்லை என்று உனக்கு ஆயிரம் முறை சொல்லி விட்டேனே, அன்புள்ள மகனே! நீயார் தெரியுமா? ஜமீன்தார் சின்னதுரையின் மகன்! இந்த சொத்துக்கெல்லாம் ஒரே வாரிசு! நீ இன்னும் 'அற்ப' புத்தியை விடவில்லையே! நம் உலகமே தனி மகனே; நம் உலகமே தனி!..." என்றெல்லாம் பேசினார். எங்கேயோ இரு விழிகளையும் குத்திட்டுக் கொண்டிருந்த சுந்தர் எல்லாவற்றுக்கும் தலையை அசைத்தான்.

"நம் உலகமே தனி மகனே!..."—அந்த சொற்கள் அவன் நினைவைவிட்டு அகலவே இல்லை. தனி உலகமாமே! அங்கே மனிதத் தன்மையை மண்மூடி புதைத்து விட்டிருப்பார்களா? நீதி நேர்மைக்கு, ஈவு இரக்கத்திற்கு சமாதி கட்டி, செல்வத்தால் பூமாலை புனைந்து அணிவித்திருப்பார்களா? ஐயையோ! அப்படியானால், அந்த உலகம் சுடுகாடுதானா?—என்றெல்லாம் யோசிப்பான்!

அன்று அவனது பிறந்த தினம்!......மாளிகை அமர்க்களப்பட்டது! வரிசை வரிசையாக பளபளக்கும் மோட்டார்கள் அணிவகுத்து நின்றது, ஒரு மோட்டார் தொழிற்சாலை போல் இருந்தது. ஊரிலுள்ள பணக்காரர்கள் அத்தனை பேரும் குழுமிவிட்டார்கள். எத்தத்தனையோ பரிசுகள் அவனுக்குக் குவிந்தன. ஆனால், அவனது கண்களிலோ மகிழ்ச்சியைக் காணோம்; மாளிகை வாசலில் 'கூர்க்கா' சிப்பாய்களின் ஏசலுக்கும் பாய்ச்சலுக்கும் தப்பி, எச்சில் இலைக்குக் காத்துக் கிடந்த அவனது நண்பர்களின் மேலேயே பார்வை நின்றது.

மாளிகை பலகணியில் நின்று கொண்டிருந்தான். "அடே, சிவசண்முக சுந்தரம்!" என்ற குரல் கேட்டது. கீழே பார்த்தான். கூர்க்காவின் தடி தந்த தண்டனையை அனுபவித்த அவனது பழைய நண்பன் ஒருவன்தான் அவனைப் பார்த்துக் கத்தினான்.

அன்றொரு நாள், அவன் சுந்தரின் உயர் நண்பன். இணை பிரியாத தோழர்கள் இருவரும். சுந்தருக்கு தொல்லை என்றால் சகிக்க மாட்டான் அவன். அவனுக்குப் பசி என்றால் தான் மட்டும் சாப்பிட மாட்டான். எச்சில் பருக்கை கிடைத்தாலும் இருவரும் பங்

❋ தொடர்ச்சி 10-ம் பக்கம்



ராம. அழகு பெருமாள்; உச்சரிச் சான் பட்டி

(?) திராவிடநாடு பிரிந்தால், காங்கிரஸ்காரர்கள் தியாகிகளுக்கு நிலமான்யம் அளித்ததுபோல்—நீங்களும் தருவதாக அறிவித்தால் பலர் உங்கள் இயக்கத்தில் சேருவரே!

தியாகத்தை சந்தைப் பொருளாக மதித்து விலைகூறும் குணம் கொண்டதல்ல தி. மு. கழகம். கைம்மாறு கருதி இங்கு வருவோரை நாங்கள் விரும்புவதில்லை; தோழரே!

வெ. நாகராசன்; திருவையாறு.

(?) தி. மு. க.வினர் சட்ட சபைக்குச் சென்றால் சட்டசபை நாடகமேடையாகிவிடும் என்று சுதேசமித்திரன் 'கார்ட்டூன்' போட்டிருக்கிறதே: இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

அவ்வாறானால் பார்ப்பன குலத்தைச் சேர்ந்த சி. ஆர். சீனுவாசன் சட்ட சபைக்குச் சென்றால் சட்ட சபை வேத பாராயண சாலையாகிவிடுமா? அன்றி, நடனமாடும் ருக்மணி அருண்டேல் பாராளுமன்றத்தில் இருப்பதால் அது நாட்டியக்கூடமாகி விட்டதா! ஏதோ நாடகத் துறையில் பணி புரியும் பலர் தி. மு. க. வில் இருப்பதால் ஊளையிடுகிறது மித்திரன்!

(?) பொதுச்செயலாளர்: செயற்குழு: பொதுக்குழு—போன்ற அமைப்புகளை வைத்துக்கொண்டிருக்கிறீர்களே: இந்த அமைப்புகளுக்குள்ள தொடர்பு என்ன?

பொதுச் செயலாளரை முதன் மந்திரியாகக் கற்பனை செய்து கொண்டால், செயற்குழு அவர் தேர்ந்தெடுத்துக் கொண்ட மந்திரி சபை; பொதுக் குழுதான் தி. மு. க. வின் 'பாராளுமன்றம்'!

இரா. இராசு; புது ஆயக்குடி.

(?) திருவள்ளுவர் பிறந்த நாளன்று அரசாங்கம் விடுமுறையாகக் கருத நாம் என்ன செய்யவேண்டும்?

திருவள்ளுவர் பகவானின் அவதாரம்; காளி நாவில் எழுத அவர் ஏட்டில் எழுதினார் — என்று பிரச்சாரம் செய்யவேண்டும்!

'கல்லிடைக்கிழான்'; சின்னப்பள்ளி.

(?) அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை—என்று குறள் கூறுவதன் பொருள் என்ன?

எம்பெருமான் 'டண நாதன்', அருள் இல்லாதார்க்கு பதவி உலசம் இல்லை — என்று அப்போதே வள்ளுவர் சமுதாயத்தைக் கிண்டல் செய்திருக்கிறாரோ; என்னவோ?

(?) ஆசியாவின் ஜோதி அகில உலகத்திற்கும் வழிகாட்டும் ஜோதியாக மாறினால் என்ன ஆகும்?

இந்தியா பற்றி எறிந்து, அந்த ஜ்வாலைதான் ஜோதியாகத் தெரிகிறது என்று—பலரும் பொருள் கொள்வர்!

முகிலன்; நாகர்கோயில்

(?) காதல் என்பது ஏன் பிறக்கிறது?

பல பிறப்பதற்காக அது பிறக்கிறது!

கோவை நகரில்
திராவிடநாடு விடுதலைநாள் (பிரிவினைநாள்) கூட்டங்கள்

15-9-56	ஆர். எஸ். புரம், 11-வது வார்டு கிளை	சத்தியவாணிமுத்து
16-9-56	இராமநாதபுரம், 4-வது வார்டு கிளை	க. அன்பழகன்
18-9-56	செல்வபுரம், 30-வது வார்டு கிளை	சிற்றுளி சுப்பரமணியம்
21-9-56	23-வது வார்டு கிளை ம. ந. க. வீதி	எம். எஸ். சாமசாமி
22-9-56	பாப்பநாய்கன்பாளையம் கிளை	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
,,	29வது வார்டு கிளை அழகிரிப் படிப்பகம்,	ஆர். எஸ். பாண்டியன்
23-9-56	சிதம்பரம் பூங்கா, நகரக் கிளை	மு. கருணாநிதி
		ஆர். எஸ். பாண்டியன்

வெள்ளி வீதி

20-ந் தேதி இதழ் மணிமகுடம் 100-வது நாடக விழா சிறப்பிதழாக வரும்.

நாவலர் நெடுஞ்செழியன்,
கலைவாணர் என். எஸ். கே, மு. வரதராசனார்,
கா. அப்பாதுரையார், நாரணதுரைக்கண்ணன்,
சகஸ்ரநாமம், கருணாநிதி ஆகியோரின் சொற்பொழிவுகளுடன்!

நிர்வாகி, வெள்ளி வீதி, சென்னை-6



1. விழாவில் கலந்துகொண்ட அன்பர்கள் முறையே: பேராசிரியர். மு. வ; பன்மொழிப் புலவர் அப்பாதுரையார்; நாவலர் நெடுஞ்செழியன்; ஆசிரியர். மு. க; நாரணதுரைக் கண்ணன்; டி. வி. என்.

100-வது நாடக விழா!

தமிழகமெங்கும் வெற்றி முழக்கத்தோடு தொண்ணூற்றி ஒன்பது தடவைகள் மு. க. தீட்டிய 'மணிமகுடம்' நாடகத்தை நடத்திய ராஜேந்திரன் நாடக மன்றத்தினர் **9—9-56** அன்று சென்னை வண்ணையம்பதி தியாகராய கல்லூரி நுண்கலைக் கழகத்தின் சார்பில் நூறாவது நாடக விழாவினை சிறப்புடன் நடத்தினர்.

விழாவிற்கு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார்.

பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன்; பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை; 'பிரசண்ட விகடன்' பத்திரிகாசிரியர் நாரண. துரைக்கண்ணன்; நடிக நண்பர் எஸ். வி. சகஸ்ரநாமம்—ஆகியோர் நாடகத்துக்குப் பாராட்டுரை வழங்கினர். கலைவாணர் என். எஸ். கே., டி. கே. சண்முகம்—ஆகியோர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர்.

இலட்சிய நடிகர் ராஜேந்திரன், "மணிமகுடம் நாடகத்தின் வெற்றி கருணாநிதியின் வெற்றி; அறிஞர் அண்ணாவின் வெற்றி: தி. மு. கழகத்தின் வெற்றி" என்ற முன்னுரையுடன் வெள்ளியால் பதிக்கப்பட்ட திராவிட நாட்டுப் படமொன்றை மு. க. விற்கு அன்பளிப்பாகத் தந்தார், நடிகமணி டி. வி. நாராயணசாமி நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

2. தலைவர் நாவலர் நெடுஞ்செழியனுடன் மு. க; ராஜேந்திரன், டி. வி. என்; ஆகியோர்.

ஆசிரியரும், அச்சிட்டவரும், வெளியிட்டவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.